# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report



# 2017



ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව
குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்
Department of Immigration & Emigration

# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# செயலாற்றுகை அறிக்கை - 2017

வெளியீடு

கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

”சுஹுருபாய” ஸ்ரீ சுபுதிபுர வீதி, பத்தரமுல்ல, இலங்கை

# - உள்ளடக்கம் -

பக்க இலக்கம்


✡ அறிமுகம் 01

✡ பணியாட் தொகுதி விபரங்கள் 02

✡ குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் நிருவாகக் கட்டமைப்பு 03

01. நிருவாகப் பிரிவு 05

- 01.1 நிருவாகக் கிளை 05
- 01.2 பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை 08
- 01.3 கொள்வனவுக் கிளை 14
- 01.4 உற்பத்தி ஊக்குவிப்பு அலகு 15

02. கடவுச்சீட்டுப் பிரிவு 16

- 02.1 கடவுச்சீட்டுக் கிளை 17
- 02.2 கடவுச்சீட்டு தயாரித்தல் கிளை 19
- 02.3 கடவுச்சீட்டு திருத்தக் கிளை 20
- 02.4 வெளிநாட்டு தூதரகக் கிளை 22
- 02.5 தபால் கிளை 25

03. கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு 27

- 03.1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை 27
- 03.2 இந்திய இலங்கை பிரஜைகள் கிளை 28
- 03.3 சட்டக் கிளை 30

04. வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு 32

- 04.1 வீசாக் கிளை 32
- 04.2 துறைமுகக் கிளை 38
- 04.3 விசாரணைக் கிளை 51
- 04:4 மனித வியாபாரத்தை ஒழிக்கு தேசிய வள நிலையம் 55

05. பிரஜாவுரிமைப் பிரிவு 57

06. தகவல் தொழில்நுட்பப் பிரிவு 61

07. கணக்குப் பிரிவு 64

08. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 67

09. நலனோம்புகை நடவடிக்கைகள் 69

# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

## செயலாற்றுகை அறிக்கை - 2017

### அறிமுகம்

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்தல் இலங்கைப் பிரஜைகள் அல்லாத ஏனைய பிரஜைகளும் ஆட்களும் இலங்கையில் இருந்து வெளியேறுவதை ஒழுங்குமுறைப்படுத்தல் இலங்கைப் பிரஜைகள் அல்லாத விரும்பத்தகாதவர்களை இலங்கையில் இருந்து வெளியேற்றுதல் முதலான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு உரியதாகும். இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச் சீட்டுகளை விநியோகித்தல் வெளிநாடுகளில் பிறக்கும் இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல் இலங்கைக் குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் இலங்கையர் அல்லாதோருக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல் முதலான பணிகளும் இத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

### நோக்கு

- பிராந்தியத்தில் முன்னனி குடிவரவு குடியகல்வுச் சேவையாகத் திகழுதல்.

### செயற்பணி

- தேசியப் பாதுகாப்பையும் சமூக விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்தலும் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திய வண்ணம் நாட்டில் இருந்து வெளியேறுவோரையும் நாட்டுக்குள் வருவோரையும் ஒழுங்குமுறைப்படுத்தலும் பிரஜைகள் சேவைகளை வழங்குதலும்.

### பணிகள்

- இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச் சீட்டுகளை விநியோகித்தலும் அதனோடிணைந்த பணிகளும்
- வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வீசா அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தலும் அதனோடிணைந்த பணிகளும்
- இலங்கை பிரஜாவுரிமையை வழங்குதலும் அதற்குரிய பணிகளும்
- எல்லைக் கட்டுப்பாடு

### சட்டத் தத்துவங்கள்

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு
- 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் மற்றும் உரிய திருத்தங்களும்
- 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் குடியகல்வோர் சட்டமும் அதற்குரியதான திருத்தங்களும்

- 1949 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இந்திய பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம்
- 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர் குடியகல்வோர் ஒழுங்கு விதிகளும் அதற்குரிய திருத்தங்களும்
- 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்களும்
- 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க பதிலாள்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்
- 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்
- மேலே குறிப்பிட்ட சட்டங்களுக்கு உரியதான அனைத்து ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும்
- குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளும் அறிவுறுத்தல்களும்.

## பணியாட் தொகுதி விபரங்கள்

திணைக்களத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையிலும் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையிலும் பொறுப்புகள் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவரது நெறிப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம் ஒருவரிடமும் 05 கட்டுப்பாட்டாளர்களிடமும், பிரதான கணக்காளர் ஒருவரிடமும் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரிடமும் அந்தந்தப் பிரிவுகளின் பொறுப்புகள் கையளிக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டின் மொத்தப் பணியாட் தொகுதி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதி (2017.12.31 ஆந் திகதியன்று)

| பதவி | சேவை | சேவை மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை | தற்பொழுதுள்ள எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.நி.சே | சிரேஷ்ட | 1 | 1 | 0 |
| மேலதிக குடிவரவு குடியகல்வு கட்டுபாட்டாளர் நாயகம் | இ.நி.சே | சிரேஷ்ட | 1 | 1 | 0 |
| குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே | சிரேஷ்ட | 5 | 5 | 0 |
| பிரதான கணக்காளர் | இ.நி.சே | சிரேஷ்ட | 1 | 1 | 0 |
| பிரதான உள்ளக கணக்காளர் | இ.நி.சே | சிரேஷ்ட | 1 | 1 | 0 |
| பிரதி /உதவி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே | சிரேஷ்ட | 40 | 38 | 2 |
| பிரதி /உதவி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் | திணைக்களம் | சிரேஷ்ட | 10 | 3 | 7 |
| கணக்காளர் | இ.க.சே | சிரேஷ்ட | 2 | 2 | 0 |
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே | மூ.நிலை | 2 | 1 | 1 |
| சி.அ. உத்தியோகத்தர் (திணை) | திணைக்களம் | மூ.நிலை | 36 | 13 | 23 |
| அதி. பெற்ற உத்தியோகத்தர் (திணை) | திணைக்களம் | மூ.நிலை | 458 | 326 | 132 |
| மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | மூ.நிலை | 2 | 2 | 0 |
| பயிற்சி முகாமையாளர் | துணைச் சேவை | இ.நிலை | 1 | 1 | 0 |
| வரவுசெலவுத்திட்ட உதவியாளர் | துணைச் சேவை | இ.நிலை | 1 | 1 | 0 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | இ.நிலை | 20 | 21 | -1 |
| அ.மு.உதவியாளர் | அ.மு.உ.சே | இ.நிலை | 378 | 340 | 38 |
| கடவுச்சீட்டு உதவியாளர் | திணைக்களம் | இ.நிலை | 35 | 31 | 4 |
| தொழிற்பாட்டு உதவியாளர் | திணைக்களம் | இ.நிலை | 50 | 0 | 50 |
| வரவேற்பு உத்தியோகத்தர் (திணை) | திணைக்களம் | இ.நிலை | 1 | 1 | 0 |
| காவலாளர் | திணைக்களம் | இ.நிலை | 3 | 2 | 1 |
| சாரதி | சாரதி சேவை | ஆரம்ப | 32 | 30 | 2 |
| ஓய்வுகூட உதவியாளர் | திணைக்களம் | ஆரம்ப | 6 | 0 | 6 |
| அலுவலக உதவியாளர் | அ.உ.சே | ஆரம்ப | 107 | 102 | 5 |
| பயிற்சி தொழிலாளி | அமய | ஆரம்ப | 10 | 7 | 3 |
| மொத்தம் | | | 1203 | 930 | 273 |

# குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் நிருவாகக் கட்டமைப்பு



# 01. நிருவாகப் பிரிவு

இப் பிரிவானது கட்டுப்பாட்டாளர் (நிருவாகம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குவதுடன் பொதுவான நிருவாகம், அனைத்துப் பிரிவுகளினதும் மனித வள முகாமைத்துவம், திணைக்களத்தின் வாகன உபயோக முகாமைத்துவம், பராமரிப்புப் பணிகள், பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் அத்துடன் கொள்வனவுப் பணிகளும் இந்தப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன.

## 01 : 1 நிருவாகக் கிளை

### 1. தாபனப் பணிகள்

#### 1.1 ஆட்சேர்ப்புகள்

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு

53 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2017.07.07 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கமைவாக 2017.09.30 ஆந் திகதி நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் 14 உத்தியோகத்தர்களும், 2017.10.22 ஆந் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் 32 உத்தியோகத்தர்களும். எதிர்வரும் ஆண்டின் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். இதற்கு மேலதிகமாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் சேவையின் தேவைப்பாடுகள் தொடர்பிலான விடயங்களை கவனத்தில் எடுத்துக் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் DMS/1177 VOL.I இலக்கத்தைக் கொண்ட 2017.11.14 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் புதிய 100 அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக நி.பி. 71 இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

#### 1.2 பதவியுயர்வுகள்

| பதவி | எண்ணிக்கை | பதவியுயர்வு பெற்ற பதவி |
|---|---|---|
| இலங்கை நிருவாக சேவை II ஆம் வகுப்பு | 04 | இலங்கை நிருவாக சேவை I ஆம் வகுப்பு |
| இலங்கை நிருவாக சேவை III ஆம் வகுப்பு | 02 | இலங்கை நிருவாக சேவை II ஆம் வகுப்பு |
| கடவுச்சீட்டு உதவியாளர் II | 29 | கடவுச்சீட்டு உதவியாளர் I ஆம் வகுப்பு |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் II | 02 | அ.மு.உ. I |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் III | 01 | அ.மு.உ.II |
| அலுவலகப் உதவியாளர் சேவை I ஆந் தரம் | 02 | விசேட தரம் |
| அலுவலகப் உதவியாளர் சேவை II ஆந் தரம் | 03 | I ஆந் தரம் |
| அலுவலக உதவியாளர் சேவை III ஆந் தரம் | 04 | II ஆந் தரம் |

1.3 பதவியில் உறுதிப்படுத்தல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் | 22 |
| முகாமைத்துவ உதவியாளர் III ஆந் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | 3 |

1.4 வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் 2016 ஆம் ஆண்டுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2017.03.19 மற்றும் 2017.04.02 ஆந் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் 2017.09.15 ஆந் திகதி வெளியிடப்பட்டது.

ஒருங்கிணைந்த சாரதி சேவையைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையவாறு I, II, III வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2017.12.21 ஆந் திகதி நடத்தப்பட்டதுடன் இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் ஆண்டில் வெளியிடப்படவுள்ளன.

அலுவலக உதவியாளர் சேவையைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையவாறு I, II, III வினைத்திறன்காண் தடைப் பரீட்சை 2017.12.27 ஆந் திகதி நடத்தப்பட்டதுடன் இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் ஆண்டில் வெளியிடப்படவுள்ளன.

1.5 இடமாற்றங்கள்

| பதவி | இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| இலங்கை நிருவாக சேவை | 17 | 10 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் I | 39 | 31 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் II | 22 | - |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் III | 12 | 07 |
| இணைந்த சாரதி சேவை | 07 | 07 |
| அலுவலக உதவியாளர் சேவை | 18 | 11 |

1.6 ஒழுக்காற்று நடவடிக்கைகள்

- ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை 05
- முடிவுறுத்தப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை 01

1.7 ஓய்வு பெறச் செய்தல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| அரசாங்க முகாமைத்துவ அதியுயர் வகுப்பு (நிருவாக உத்தியோகத்தர்) | 01 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 02 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் I | 11 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் II | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் III | 02 |
| சாரதி | 02 |
| அலுவலக உதவியாளர் சேவை | 05 |

## 2. விசேட பணிகள் - பணியாட் தொகுதியினரை ஊக்கப்படுத்தல்.

திணைக்களப் பணியாட் தொகுதியினரை ஊக்கப்படுத்தும் நடவடிக்கையாக 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறந்த உத்தியோகத்தர்களுக்காக பாராட்டுதல்கள், சான்றிதழ்கள் அத்துடன் விருதுகள் வழங்கப்பட்டன. விருதுகளுக்காக திணைக்களத்தின் நலன்புரிச் சங்கம் அனுசரணை வழங்கியது. ஒவ்வொரு சேவை வகுதிக்கும் அமைவாக மிகச் சிறந்த உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 06 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 07 |
| கடவுச்சீட்டு உதவியாளர் | 02 |
| அலுவலக உதவியாளர் சேவை | 04 |
| சாரதி | 01 |

## 01 : 2 பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

இந்தக் கிளையானது கட்டுப்பாட்டாளர் (நிருவாகம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது. இந்தக் கிளையின் பணியாட் தொகுதியினராக பயிற்சி முகாமையாளர் ஒருவரும், மூன்று அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்களும் அத்துடன் அலுவலக உதவியாளர் ஒருவரும் உள்ளனர்.

திணைக்களத்தின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக பங்களிப்பு நல்கின்ற பணியாட் தொகுதியின் வினைத்திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தல் அத்துடன் மிகச் சிறந்த மக்கள் சேவையினை வழங்குவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகளை இனங்காணுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல், இந்தப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளையின் நோக்கமாகும்.

இதற்கமைவாக திணைக்களத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் பண்புசார் தன்மையுடனும் போதுமான வளர்ச்சிமிக்க நுழைவுகளுக்காக நெறிப்படுத்தும் பொருட்டு திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களினதும் அறிவு, தேர்ச்சி மற்றும் எண்ண விருத்திக்காக பயிற்சிகளின் தேவைப்பாடுகளை இனங்கண்டு அதற்கு ஏற்றவாறு மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை

- திட்டமிடல்
- அபிவிருத்தி செய்தல்.
- நடைமுறைப்படுத்தல்.
- ஏனைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்களை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக வருடாந்த நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக வெளி நிறுவனங்கள் மற்றும் தூதரகங்கள், சர்வதேச அமைப்புகளின் ஊடாக பணியாட் தொகுதிப் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்களை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கைகள்.

பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பொழிப்பு பின்வருமாறு.

| | நடந்த திகதி | நிகழ்ச்சித் திட்டத்தின் விபரம் | கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் | இடம் |
|---|---|---|---|---|
| 01) | 2017.01.02 – 2017.01.06 | 2017 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களுக்கான ஆரம்பப் பயிற்சி செயலமர்வு | அ.மு.உ<br>சாரதி<br>அலு. உதவியாளர். | கேட்போர் கூடம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம். |
| 02) | 2017.01.06 | கைவிரல் அடையாளத்ததை முறையாகப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் | மாத்தறை, கண்டி (அ.மு.உ) | விரிவுரை மண்டபம் |
| 03) | 2017.01.24 | Workshop on facial image Recognition | நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | விரிவுரை மண்டபம் |
| 04) | 2017.01.25 | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழிமுறைகள் | அ.மு.உதவியாளர் | கேட்போர் கூடம் |
| 05) | 2017.01.27 | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழிமுறைகள் | ஏனைய பணியாட் தொகுதியினர் | கேட்போர் கூடம் |
| 06) | 2017.01.28 | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழிமுறைகள் | பதவியணி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 07) | 2017.01.29 | தகவல் அறியும் சட்டம் தொடர்பான செயலமர்வு | பதவியணி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 08) | 2017.01.30 | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழிமுறைகள் | சகல பணியாட் தொகுதியினருக்கும் | கேட்போர் கூடம் |
| 09) | 2017.02.06 | விளையாட்டுத்துறை மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம். | பதவியணி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் | கேட்போர் கூடம் |
| | 2017.02.06-12 | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழிமுறைகள் | பதவியணி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் | கேட்போர் கூடம் |
| 10) | 2017.02.07 | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழிமுறைகள் | பதவியணி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் | கேட்போர் கூடம் |
| 11) | 2017.02.08 | மன அழுத்த முகாமைத்துவம் | பதவியணி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் | கேட்போர் கூடம் |
| 12) | 2017.02.09 | மன அழுத்த முகாமைத்துவம் | பதவியணி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் | கேட்போர் கூடம் |
| 13) | 2017.02.15-17 | Training for Navy Officers on Identification of Travel Document & Visa procedures /Formalities | Navy Officers | Auditorium |
| 14) | 2017.03.10 | கைவிரல் அடையாளம் மற்றும் உபயோகம் பற்றிய பயிற்சி செயலமர்வு | பதவியணி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் | கேட்போர் கூடம் |
| 15) | 2017.03.25-26 | Training work shop on International Migration Law | Executive officers | Hotel Blue Water Wadduwa |
| 16) | 2017.03.27 | வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் பற்றிய விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | கடற்படை உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 17) | 2017.04.06 | கைவிரல் அடையாளம் மற்றும் உபயோகம் பற்றிய பயிற்சி செயலமர்வு | பதவியணி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 18) | 2017.04.24 – 2017.05.05 | Training of Trainers (Canadian High Commission) | Authorized officers | Lecture hall 2 |
| 19) | 2017.04.26 | கைவிரல் அடையாளம் மற்றும் உபயோகம் பற்றிய பயிற்சி செயலமர்வு | உதவிக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 20) | 2017.05.05 | Familiarization on Function related to DIE | SLAS officers | கேட்போர் கூடம் |
| 21) | 2017.05.15 – 2017.05.26 | Risk Management | Authorized officers | Auditorium |
| 22) | 2017.05.19 | அடையாள அட்டையை பரிசோதித்தல் பற்றிய செயலமர்வு | பதவியணி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 23) | 2017.05.23 | Familiarization on Function related to DIE | SLAS officers | கேட்போர் கூடம் |
| 24) | 2017.06.05 | சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட்டம் மற்றும் தேசிய சுற்றாடல் வாரத்துக்காக பாடசாலைப் பிள்ளைகளை விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம். | பதவியணி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 25) | 2017.06.06 | Familiarization on Function related to DIE | SLAS officers | கேட்போர் கூடம் |
| 26) | 2017.06.07 | இரட்டைப் பிரஜாவுரிமை பற்றிய விழிப்பூட்டல். | பதவியணி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 27) | 2017.06.21 | Awareness Programme on Document Identification | Authorized officers | Auditorium |
| 28) | 2017.06.15-16 | சம்பளத் திருத்தம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | முகாமைத்துவ உதவியாளர் | திறன் விருத்தி நிறுவனம் |
| 29) | 2017.07.05 | Passenger Clearance Technical Operations at the air port | Executives & Chief Management Assistance | Bandaranayeka International Air Port |
| 30) | 2017.07.07 | களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | பதவிநிலை உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் | கேட்போர் கூடம் |
| 31) | 2017.07.20 | Study tour on Immigration & Emigration formality at BIA | MAS/TDA | Bandaranayeka International Air Port |
| 32) | 2017.07.27-30 | 40th Anniversary of the Open Economy national Exhibition. | | National Youth Center |
| 33) | 2017.07.30 | புதிய முன்னேற்றங்கள் தொடர்பில் பணியாட் தொகுதியினருக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட பிரதான முகாமைத்துவ உதவியாளர்கள் | கேட்போர் கூடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 34) | 2017.07.30 | வீசாப் பிரிவின் கடமைகள் பற்றிய விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | வீசாப் பிரிவின் உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 35) | 2017.08.11-13 | CRT/ Trade Fair 2017 | Training Manager MA/KKS/Driver | BMICH |
| 36) | 2017.08.22 | Study tour on immigration & Emigration formality at BIA | MAS/TDA | Bandaranayeka International Air Port |
| 37) | 2017.08.24 | பிரஜாவுரிமை சட்டம் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பிரஜாவுரிமைக் கிளையின் கடமைகள் பற்றி விளக்கமளித்தல். | 2017 ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த பதவிநிலை உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 38) | 2017.09.28 | பெண் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் சுகாதார ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் | 35 வயதுக்கு மேற்பட்ட பெண் உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 39) | 2017.1003 | சிங்கள மொழியை சரியாகப் பயன்படுத்துவது பற்றிய விசேட செயலமர்வு | அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் | கேட்போர் கூடம் |
| 40) | 2017.10.09-11 | Capacity Building Programme | Senior Immigration officers | Auditorium |
| 41) | 2017.09.25 – 2017.10.06 | Training of Trainers programme (TOT ) | Authorized officers | Computer Lab |
| 42) | 2017.10.28-29 | Work Shop on Border Operation (IBM) | Executive Officers | Avani Hotel |
| 43) | 2017.10.04 | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் வீட்டில் தேங்காய் உபயோகத்தின் போது ஏற்படுகின்ற தேங்காய் வீண் விரயத்தைக் குறைத்துக் கொள்ளுவது தொடர்பிலான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளித்தல் | அனைத்து பணியாட் தொகுதியினரும் | பியச சுற்றுச்சூழல் |
| 44) | 50 மணித்தியாலங்கள் | தமிழ் பாடநெறி | பணியாட் தொகுதி ஊழியர்கள் | விரிவுரை மண்டபம் II |
| 45) | 2017.10.27 | விமான நிலைய ஆய்வுச் சுற்றுலா | பணியாட் தொகுதி ஊழியர்கள் | விமான நிலையம் |
| 46) | 2017.10.30 – 2017.11.09 | Training of trainer Programme (TOT) | Authorized officers | Computer unit |
| 47) | 2017.11.02 | தமிழ் பாடநெறி | பணியாட் தொகுதி ஊழியர்கள் | விரிவுரை மண்டபம் II |
| 48) | 2017.11.15-16 | Work shop on Capacity Building | Senior Immigration Officers | Jetwing Sea Hotel |
| 49) | 2017.11.02 | தமிழ் பாடநெறி | அலுவலக உதவியாளர்கள் | கேட்போர் கூடம் |
| 50) | 2017.11.14 | Training Programme on Facial Recognition & Document Examination. | Controllers, Deputy Controllers, Assistant Controllers | Lecture Hall 01 |
| 51) | 2017.11.17 - (வெள்ளி) | தமிழ் பாடநெறி கட்டம் III (மு.ப.: 11.00 – பி.ப.: 1.00) | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் சேவை மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள் | விரிவுரை மண்டபம் I |

| | | | | |
|---|---|---|---|---|
| 52) | 4 Months | Functional English Language Course Conducted by Colombo International school | Executive Officers | Lecture Hall 01 |
| 53) | 4 Months | Functional English Language Course) Conducted by Colombo International school | All Staff Officers | Lecture Hall 01 |
| 54) | 2017.11.22 | லிங்க் நெச்சுரல் புரொடக்டிவ் நிறுவனத்தின் வெளிக்களச் சுற்றுலா | பணியாட் தொகுதி உத்தியோகத்தர்கள் | லிங்க் நெச்சுரல் புரொடக்டிவ் நிறுவனம் |
| 55) | 2017.12.04-2017.12.08 | Trainer Development Programme Canadian High Commission | Authorized Officers | Lecture Hall 01 |
| 56) | 2017.12.07 | கணக்காய்வு விசாரணைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | பணியாட் தொகுதி உத்தியோகத்தர்கள் | கேட்போர் கூடம் |
| 57) | 2017.12.13 | Training on OM New Passport Issuing Process (Fingerprint Capturing Updates) | Authorized Officers | Air port immigration officers rest Auditorium |
| 58) | 2017.12.14 | Training on OM New Passport Issuing Process (Fingerprint Capturing Updates) | Authorized Officers | Air port Immigration officers rest Auditorium |
| 59) | 2017.12.08 | Fingerprint Capturing Programme | Development officers | Movenpic Hotel |
| 60) | 2017.12.14 | Field visit Students of Ruhuna University | Ruhuna university students | Auditorium |
| 61) | 2017.12.18 | Fingerprint Capturing Programme | Chief Clarks of immigration | Movenpick Hotel |
| 62) | 2017.12.20 | Awareness Programme on I & E Act and Penal code Provisions-2017 | All SAO'S and AO's | 13th flow ID office Auditorium |
| 63) | 2017.12.21 | Awareness Programme on I & E Act and Penal code Provisions-2017 | All SAO'S and AO's | கேட்போர் கூடம் |
| 64) | 2017.12.23-24 | ஆற்றல் விருத்தி வதிவிடப் பயிற்சி - 2017 | பிரதேச அலுவலக உத்தியோகத்தர்களுக்காக | அத்துருகிரிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ கேட்போர்கூடம் |
| 65) | 4 Months | Functional English Language Course Advance Conducted by Colombo International school | Executive Officers | Lecture Hall 01 |
| 66) | 4 Months | Functional English Language Course Advance Conducted by Colombo International school | All Staff Officers | Lecture Hall 01 |






கடவுச்சீட்டுக்காக கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளுவது தொடர்பிலான விளக்கமளிக்கும் பயிற்சி - 2017.12.18






முகத்தில் உயிரியல்சார் அம்சங்களை இனங்காணுதல் மற்றும் ஆவணங்களை பரிசோதனை செய்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - 2017.11.14

மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டு கொழும்பு சர்வதேச பாடசாலையுடன் (Colombo International School) இணைந்து திணைக்களத்தின் நிறைவேற்றுத் தரம் மற்றும் நிறைவேற்றுத் தரம் சாராத பணியாட் தொகுதியினருக்காக வாரத்தில் 04 நாட்கள் விகிதம் நான்கு மாத காலத்துக்கான 04 ஆங்கிலப் பாடநெறிகள் நடத்தப்பட்டன. இதற்காக மேலே குறிப்பிட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆங்கில மொழி தொடர்பிலான விசேட ஆற்றலுள்ள நான்கு ஆசிரியைகள் அவர்களது முழுநேர சேவையை எந்தவித கொடுப்பனவும் பெற்றுக் கொள்ளாமல் வழங்கினர்.

# 01 : 3 கொள்வனவுக் கிளை

இந்தக் கிளையின் மூலமே திணைக்களத்தின் அனைத்து கொள்வனவுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.இத் திணைக்களத்துக்கு வருடாந்தம் தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் சரியானவாறும் வெளித்தெரியும் வண்ணமும் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவை மற்றும் அதற்குரிய சட்ட விதிகளைப் பின்பற்றி கொள்வனவு செய்வது இந்தக் கிளையின் நோக்கமாகும்.

இந்தக் கிளையின் பணிகள் பின்வருமாறு.

- எல்லா ஆண்டின் ஆரம்பத்திலும் குறித்த ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- மேலே குறிப்பிட்ட கொள்வனவுத் திட்டத்துக்கு அமைவாக கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்கள், பொறிமுறைகள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அனைத்து சேவை ஒப்பந்தங்களையும் இற்றைவரைப்படுத்தல் (பாதுகாப்புச் சேவை, துப்பரவேற்பாட்டுச் சேவை, பொறிமுறைகளைப் பராமரித்தல் சேவை போன்றன)
- வெற்றுக் கடவுச் சீட்டுகளை இறக்குமதி செய்வதற்கான கொள்வனவுப் பணிகளை நிறைவேற்றதல்.
- திணைக்களத்தின் கணினி தகவல் முறைமையை இற்றைவரைப்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள்.

2017 ஆம் ஆண்டின் கொள்வனவுக் கிளையின் பணியாட் தொகுதி

| பதவி /சேவை | எண்ணிக்கை |
|---|---|
| உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்வனவு) | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |

2017 ஆம் ஆண்டு கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமதி

| கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் சேவைகள் | பொருட்களின் பெறுமதி (ரூபா) |
|---|---|
| அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் | 20,052,445.00 |
| அச்சு இயந்திரங்களும் நிழல்பட இயந்திரங்களும் | 2,729,400.00 |
| கணினி முறைமைக்குரிய உபகரணங்கள் | 38,313,960.00 |
| ஸ்கேனர் இயந்திரங்கள் | 10,764,000.00 |
| வெற்றுக் கடவுச்சீட்டுகளும் கடவுச்சீட்டு அச்சுப் பணிகளுக்கான சாயமும் | 19,477,378.00 |
| கட்டட நிருமாணிப்புகளும் பகுதிகளைச் சேர்த்தலும் | 30,233,383.00 |
| வீசா ஸ்ரிக்கர் | 26,714,500.00 |
| வைபவங்களும் பிற ஏற்பாடுகளும் | 2,209,839.00 |
| ஆவணங்களை ஸ்கேன் செய்தல் | 2,681,113.00 |
| மொத்தம் | **153,176,018.00** |

# 01 : 4 உற்பத்தி ஊக்குவிப்பு அலகு

இந்தக் கிளை 2017 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுகின்றது.

**நோக்கம் :**
குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் சேவைகளை வினைத்திறனாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல்.

பணியாட் தொகுதி - 2017

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 |

**மேற்கொண்ட பணிகள்**

- 10 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தியமை.
  (எண்ண விருத்தி, ஆக்கத்திறன், தரவட்ட எண்ணக்கரு, கைசேன் எண்ணக்கரு)
- அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் 12 தர வட்டங்கள் நிறுவியமை.
- தரவட்டக் கூட்டங்கள் நடைமுறைப்படுத்தியதன் மூலம் கிடைக்கின்ற முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களின் ஊடாக சேவைகள் மேம்படுத்துதல்.
- புதிதாக திசைகள் மற்றும் பெயர்பலகைகளை உருவாக்கி அதனைப் பொருத்தியதன் மூலம் அலுவலக வளாகத்தை முறையாகவும் கவர்ச்சிகரமாகவும் ஆக்கியமை.






- உற்பத்தி ஊக்குவிப்பு அலகில் கண்காட்சிக் கூடமொன்றை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.












2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கின்ற பணிகள்

- உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைவாக திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளினதும் சேவைகளை மேம்படுத்தல்.
- 2016/2017 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றுகைத் திட்டத்துக்கு அமைவாக திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளினதும் சேவைகளை மேம்படுத்துதல்.
- உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அலகுக்கு உரியவாறு கண்காட்சிக் கூடத்தை உருவாக்கி விருத்தி செய்தல்.
- புதிய பணியாட் தொகுதிக்காக பயிற்சிப் பிரிவுடன் இணைந்து பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுகளை சிறந்தவாறு முறைப்படுத்தல்.

# 2. கடவுச்சீட்டுப் பிரிவு

கடவுச்சீட்டுப் பிரிவானது கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது. இலங்கையர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தடையின்றி பயணிப்பதற்கும், தங்கியிருப்பதற்கும் மற்றும் மீண்டும் வருவதற்கும் பயன்படுத்தக் கூடியவாறு சர்வதேச தரத்துக்கு அமைவாக கடவுச்சீட்டுகள் இந்தப் பிரிவினால் விநியோகிக்கப்படுகின்றது. கடவுச்சீட்டுகளை விநியோகித்தலானது ஒரு நாள் சேவை எனவும் வழமையான சேவை எனவும் மேற்கொள்ளப்படுவதுடன் ஒரு நாள் சேவையானது பிரதான அலுவலகத்தில் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## நோக்கு

''சேவை பெறுநர்களின் உச்ச வசதிகள் தொடர்பில் உணர்வுபூர்வமாகச் செயற்பட்டு அவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு சரியானதும் தரம் வாய்ந்ததுமான கடவுச்சீட்டுகளை வெளிநாடு செல்லுவதற்காக விநியோகித்தல்''

## நோக்கமும் பணிகளும்

01. இலங்கைக் கடவுச்சீட்டின் தரத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
02. சரியானதும் உண்மையானதுமான தகவல்களை உள்ளடக்கியதான வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை இலங்கையர்களுக்கு விநியோகிப்பதற்கான நடைமுறைத்திட்டங்களைப் பின்பற்றுதல்.
03. இலங்கையரின் குடிவரவு, குடியகல்வுப் பணிகள் சம்பந்தமான நீதிமன்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல்.
04. இலங்கையரின் குடிவரவு ,குடியகல்வுப் பணிகளுக்குரியவாறு பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படல்.

இந்தப் பிரிவின் பணிகள் இதன் 5 கிளைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதாவது,

01. விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் கிளை (கடவுச்சீட்டுக் கிளை)
02. கடவுச்சீட்டு தயாரித்தல் கிளை
03. கடவுச்சீட்டு திருத்தக் கிளை
04. வெளிநாட்டுத் தூதரகக் கிளை
05. தபால் கிளை

## 02 : 1 கடவுச்சீட்டுக் கிளை

இத் திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக சேவை பெறுநர்கள் அதிகமாக வருகை தரும் கிளை இந்தக் கிளையாகும் என்பதுடன் நாளாந்தம் வருகை தரும் சேவை பெறுநர்களின் எண்ணிக்கை சுமார் 2500 ஆகும். மக்களுக்கு மிக அண்மித்ததும், வினைத்திறன் வாய்ந்ததும், துரிதமானதுமான சேவையினை வழங்கும் நோக்கில் வழமையான சேவையின் கீழ் பிராந்திய ரீதியாக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக கண்டி, மாத்தறை, வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் 4 பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பிராந்திய அலுவலகங்கள் 4 பிரதி / உதவி கட்டுப்பாட்டாளர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றன.

**பணியாட் தொகுதி - 2017**

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 1 |
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | 16 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 7 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 56 |
| அலுவலக உதவியாளர் | 18 |

## 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றிய விசேட பணிகள்

01. மக்களுக்கு பிராந்திய ரீதியாக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளும் சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் முகமாக குருநாகல் பிராந்திய அலுவலகம் 2017.02.12 ஆந் திகதி திறக்கப்பட்டது.







02. சுய விபரத்துக்காக கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையை விரிவுபடுத்தல் :-

கணினி முறைமையில் மட்டுப்படுத்தப்பட்ட காரணிகளின் அடிப்படையில் 2017 ஆகஸ்ட் மாதம் வரை சுய விபரத்துக்காக இரண்டு கைகளின் பெருவிரல் அடையாளத்தை மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 2017.09.25 ஆந் திகதி தொடக்கம் இரண்டு கைகளின் 10 விரல்களினதும் அடையாளத்தைப் பெற்றுக் கொண்டு சுய விபர முறைமைக்குள் உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம் கடவுச்சீட்டின் தரம் மேலும் மேம்படுத்தப்பட்டது.






## 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றவதற்கு எதிர்பார்க்கின்ற பணிகள்

1. இலங்கையின் கடவுச்சீட்டின் தரத்தை மேலும் மேம்படுத்தும் நடவடிக்கையாக தற்பொழுது விநியோகிக்கின்ற கடவுச்சீட்டு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் (ICAO) தேர்வுமுறைக்கு ஏற்றவாறு நவீன தொழில்நுட்பம் மற்றும் மேலதிக பாதுகாப்பு அம்சங்கள் (Security Features) அத்துடன் உயிரியல்சார் தகவல்களையும் உள்ளடக்கி இலத்திரனியல் கடவுச்சீட்டாக (E- Passport) மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் தொலைத்தொடர்பு மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் 2018 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் இந்தக் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கடவுச்சீட்டு விநியோகத்தின் முன்னேற்றம் - 2017

### பிரதான அலுவலகம்

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமான | மத்திய கிழக்கு நாடுகளுக்கான | அவசரச் சான்றிதழ் | அடையாளச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 339 | 1,819 | 369,197 | 173,901 | 17,787 | 01 | 563,044 |

### பிராந்திய அலுவலகங்கள்

| | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமான | மத்திய கிழக்கு நாடுகளுக்கான | அவசரச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கண்டி | 06 | 28,571 | 9,571 | 4,645 | 42,793 |
| வவுனியா | 01 | 15,664 | 4,987 | 540 | 21,192 |
| மாத்தறை | 05 | 18,910 | 3,555 | 2,252 | 24,722 |
| குருநாகல் | 02 | 2,524 | 935 | 248 | 3,709 |
| மொத்தம் | 14 | 65,669 | 19,048 | 7,685 | 92,416 |

2017 ஆம் ஆண்டு திணைக்களத்தின் ஊடாக விநியோகிக்கப்பட்ட அனைத்து கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமான | மத்திய கிழக்கு நாடுகளுக்கான | அவசரச் சான்றிதழ் | அடையாளச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **339** | 1,833 | 434,866 | 196,949 | 25,472 | 01 | 659,460 |

2012 தொடக்கம் 2017 வரை கடவுச்சீட்டு விநியோகம் (கடவுச்சீட்டுகளின் வகைகளுக்கு அமைவாக)

| ஆண்டு | இராஜதந்திர | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமான | மத்திய கிழக்கு நாடுகளுக்கான | அவசரச் சான்றிதழ் | அடையாளச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 338 | 998 | 284,231 | 214,352 | 17,611 | 6 | 517,536 |
| 2014 | 309 | 1043 | 234,943 | 198,815 | 14,786 | 6 | 449,902 |
| 2015 | 471 | 1313 | 287,438 | 176,963 | 25,180 | 2 | 491,367 |
| 2016 | 401 | 1,856 | 422,394 | 200,311 | 33,751 | 12 | 658,725 |
| 2017 | 339 | 1,819 | 369,197 | 173,901 | 17,787 | 01 | 563,044 |

## 02 : 2 கடவுச்சீட்டு தயாரித்தல் கிளை

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக்கிளை இயங்குகின்றது

புதிதாக கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்காக கடவுச்சீட்டுக் கிளையிடமிருந்தும், வெளிநாட்டு தூதரகக் கிளையிடமிருந்தும் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரிசீலனையின் பின்னர் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தரவுகளை உள்ளீர்ப்புச் செய்தல் (Data Entry), இவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளல் (Validate), புகைப்படத்தையும் கையொப்பத்தையும் கவர்ந்தெடுத்தல் (Capture), அச்சிடுதல் (Print), அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுக்களில் மாற்றங்கள் மற்றும் அவதானிப்புகள் ஏதும் இருப்பின் இதனை கடவுச்சீட்டின் 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல். (Observation Print), தரக் கட்டுப்பாடு (Quality Assurance), கடவுச்சீட்டுக்களை லெமினேட்டிங் செய்தல், ஒப்பிட்டுப் பார்த்தலும் 4 வது பக்கத்தை ஸ்கேன் செய்தலும் (Compare & 4th Page Scan) மற்றும் இறுதித் தரப் பரிசோதனை (Quality Confirm) ஆகியவற்றை மேற்கொண்டதன் பின்னர் ஒரு நாள் சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுகள் விநியோகிக்கின்ற கருமபீடத்திற்கும், சாதாரண சேவையின் கீழ் விநியோகிக்கின்ற கடவுச்சீட்டுக்கள் தபால் கிளைக்கும் வெளிநாட்டு தூதரங்கள் மூலம் கிடைக்கின்ற விண்ணப்பங்களுக்காக விநியோகிக்கின்ற கடவுச்சீட்டுக்கள் வெளிநாட்டு தூதரகக் கிளைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக திருத்தங்களுக்காக அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தலின் பின்னர் தரவுகள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு (Data Entry ), அவற்றை மீள உறுதிப்படுத்திக் கொண்டு (Validate) திருத்தங்களை 4 வது பக்கத்தில் அச்சிட்டும் (Observation Print) பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பணியாட் தொகுதி - 2017

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 1 |
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | 2 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 1 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 37 |
| கடவுச் சீட்டு உதவியாளர் | 17 |
| அலுவலகப் பணியாளர் | 9 |

## 02 : 3 கடவுச்சீட்டு திருத்தக் கிளை

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக்கிளை இயங்குகின்றது

பணியாட் தொகுதி - 2017

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிக் கட்டுப்பாட்டாளர் (திருத்தங்கள்) | 1 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 4 |
| அலுவலக உதவியாளர் | 2 |

தற்பொழுது பெற்றுள்ள கடவுச்சீட்டுகளின் உள்ளடக்கப்பட்ட தகவல்களை விண்ணப்பதாரிகளின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்தல் இக் கிளையினால் மேற்கொள்ளப்படுகின்ற பணியாகும்.

இதற்காக ஒவ்வொரு மாற்றத்துக்கும் ரூபா 500/= அறவிடப்படுவதுடன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று ஒரு மணித்தியாலத்துக்குள் இப் பணி நிறைவேற்றப்படுகின்றது.

கடவுச்சீட்டு திருத்தங்கள் - 2017

| வகுதி | மொத்தம் |
|---|---|
| ஒரு வெளிநாட்டுப் பயணத்துக்காக செல்லுபடியாக்குதல். | 452 |
| தனிவழிப் பயண மட்டுப்படுத்தலை இரத்துச் செய்தல். | 3250 |
| இரட்டைக் குடியுரிமையை உள்ளடக்குதல். | 448 |
| சிறார்களை நீக்குதல் | 1606 |
| அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல். | 8032 |
| திருமணத்துக்கு முன்னுள்ள பெயரை இடுதல். | 285 |
| பெயர் மாற்றம் செய்தல் | 5428 |
| திருமணத்துக்குப் பின்னுள்ள பெயரை இடுதல். | 1471 |
| பிற திருத்தங்கள் (கட்டணமின்றி) | 01 |
| பிற திருத்தங்கள் 01 | 10730 |
| பிற திருத்தங்கள் 02 | 122 |
| பிற திருத்தங்கள் 03 | 01 |
| பதவியைக் குறித்துக் கொள்ளல். | 27101 |
| புதுப்பித்தல். | 106 |
| திருமணத்துக்கு முன்னர் மரபுவழிப் பெயரை இடுதல் | 23 |
| மொத்தம் | 59056 |

கடவுச்சீட்டு திருத்தம் (2013 தொடக்கம் 2017 வரை)

| வகை | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| எல்லா நாடுகளுக்குமாக செல்லுபடியாக்குதல் | 2,557 | 473 | - | 390 | - |
| ஒரு வெளிநாட்டுப் பயணத்துக்காக செல்லுபடியாக்குதல். | 541 | - | 397 | - | 452 |
| தனிவழிப் பயண மட்டுப்படுத்தலை இரத்துச் செய்தல். | 1,309 | 1,151 | 1,289 | 2,053 | 3,250 |
| காலப் பகுதியை நீடித்தல் | 10,384 | 2,368 | - | - | - |
| இரட்டைக் குடியுரிமையை உள்ளடக்குதல். | 0 | 11 | 209 | 376 | 448 |
| தாய் அல்லது தந்தையின் கடவுச்சீட்டில் பிள்ளைகளை உள்ளடக்குதல். | 1,856 | 1,496 | 794 | - | - |
| தாய் அல்லது தந்தையின் கடவுச்சீட்டில் பிள்ளைகளை நீக்குதல். | 2,361 | 2,219 | 2,190 | 2,310 | 1,606 |
| தாய் அல்லது தந்தையின் கடவுச்சீட்டில் பிள்ளைகளின் புதிய புகைப்படங்களை உள்ளடக்குதல். | 137 | 135 | 47 | - | - |
| அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல். | 1,671 | 2,070 | 2,003 | 4,209 | 8,032 |
| திருமணத்துக்கு முன்னுள்ள பெயரை இடுதல். | 40 | 16 | 48 | 255 | 285 |
| திருமணத்துக்குப் பின்னுள்ள பெயரை இடுதல். | 2,036 | 2,033 | 1,898 | 1,668 | 1,471 |
| பெயர் மாற்றம் செய்தல் | 3,399 | 3,119 | 3,265 | 4,038 | 5,428 |
| பெயர் மாற்றம் செய்தல் (பிற) | 7 | 3 | 2 | 3 | - |
| பதவியைக் குறித்துக் கொள்ளல். | 55,655 | 66,922 | 54,400 | 39,629 | 27,101 |
| பதவியைக் குறித்துக் கொள்ளல். (கட்டணமின்றி) | 2 | - | 880 | - | - |
| பிற திருத்தங்கள் (கட்டணமின்றி) | 151 | 81 | 9 | 1 | 01 |
| பிற திருத்தங்கள் 01 | 27,462 | 28,669 | 20,844 | 15,814 | 10,730 |
| பிற திருத்தங்கள் 02 | 995 | 913 | 330 | 224 | 122 |
| பிற திருத்தங்கள் 03 | 27 | 17 | 7 | 2 | 01 |
| புதுப்பித்தல். | - | - | - | 346 | 106 |
| மொத்தம் | 110,590 | 111,696 | 88,612 | 71,318 | 59,056 |



## 02: 4 வெளிநாட்டுத் தூதரகக் கிளை

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் அனுப்பி வைக்கின்ற விண்ணப்பங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக இத் திணைக்களத்துக்கு கிடைப்பதுடன் இந்த விண்ணப்பங்களுக்காக தயாரிக்கப்படுகின்ற புதிய கடவுச்சீட்டுகளை மீண்டும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு கையளிக்கும் வரைக்கும் அனைத்துப் பணிகளும் இந்த வெளிநாட்டு தூதரகக் கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆண்டின் வெளிநாட்டு தூதரகக் கிளையின் பணியாட் தொகுதி

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 1 |
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | 1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 1 |
| அரசாங்க முகாமைத்துவ உத்தியோகத்தர். | 14 |
| அலுவலக உதவியாளர் | 3 |

### வெளிநாட்டு தூதரகக் கிளையின் நோக்கமும் பணியும்.

- வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து கிடைக்கின்ற விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டுகளை விநியோகித்தல்.
- வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வெளிநாட்டு தூதரகங்களினால் தற்காலிக கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு அங்கீகாரத்தை வழங்குதல்.
- வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளில் உள்ள தகவல்களை திருத்தங்கள் செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
- வெளிநாட்டு தூதரகங்களினால் கோரப்படுகின்ற சந்தர்ப்பங்களில் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி அறிக்கையை வழங்குதல்.

2017 ஆம் ஆண்டு இந்தக் கிளையினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகள் பற்றிய விபரங்கள்

| மாதம் | எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 3043 |
| பெப்ரவரி | 3457 |
| மார்ச்சு | 4603 |
| ஏப்ரல் | 4038 |
| மே | 4532 |
| ஜுன் | 4614 |
| ஜுலை | 3752 |
| ஆகஸ்ட் | 4167 |
| செப்தெம்பர் | 3358 |
| ஒக்தோபர் | 2805 |
| நவம்பர் | 4016 |
| திசெம்பர் | 3162 |
| **மொத்தம்** | **45547** |

2017 ஆம் ஆண்டு இந்தக் கிளையினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகள் பற்றிய விபரங்கள்




2012 ஆண்டு தொடக்கம் 2017ஆண்டு வரை வெளிநாட்டு தூதரகக் கிளையினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகள் பற்றிய விபரங்கள்

| மாதம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 2813 | 2117 | 2929 | 2027 | 2848 | 3043 |
| பெப்ரவரி | 1731 | 225 | 3312 | 3152 | 2049 | 3457 |
| மார்ச்சு | 3752 | 3329 | 3768 | 3551 | 3783 | 4603 |
| ஏப்ரல் | 3426 | 3298 | 3446 | 4082 | 4788 | 4038 |
| மே | 3785 | 3219 | 2921 | 3052 | 5229 | 4532 |
| ஜுன் | 3770 | 4256 | 3346 | 3573 | 4491 | 4614 |
| ஜுலை | 3169 | 3271 | 3858 | 3497 | 3271 | 3752 |
| ஆகஸ்ட் | 2956 | 1027 | 3329 | 3951 | 4562 | 4167 |
| செப்தெம்பர் | 2609 | 3524 | 3297 | 3307 | 3485 | 3358 |
| ஒக்தோபர் | 3343 | 3015 | 3632 | 3112 | 3322 | 2805 |
| நவம்பர் | 2610 | 3918 | 3010 | 1833 | 3673 | 4016 |
| திசெம்பர் | 2721 | 2512 | 4080 | 1908 | 3021 | 3162 |
| மொத்தம் | 36685 | 35711 | 39828 | 37045 | 44522 | 45547 |

# 2012 ஆண்டு தொடக்கம் 2017ஆண்டு வரை வெளிநாட்டு தூதரகக் கிளையினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகள் பற்றிய விபரங்கள்




## 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள்

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு இலங்கை வெளிநாட்டு தூதரங்களின் ஊடாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதனால் அனைவரினதும் உச்ச அர்ப்பணிப்புடன் உரிய பணிகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டு அதிகளவான கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டன.

## 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கின்ற பணிகள்

1. இலங்கைக் கடவுச்சீட்டுக்காக விண்ணப்பதாரர்களின் உயிரியல் தரவுகள் ( கைவிரல் அடையாளம் மற்றும் முகத்தின் அம்சங்கள் அடங்கிய புகைப்படம்) பெற்றுக் கொள்ளல் 2015.08.10 ஆந் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களின் ஊடாக கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்களின் உயிரியல் தரவுகள் இற்றைவரை பெற்றுக் கொள்ளப்படவில்லை எவ்வாறாயினும் 2018. ஜனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர்களும் (16 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 60 வயது வரையிலானதுமான வயதெல்லையைக் கொண்டவர்கள்) அவர்களது கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இலங்கைக்கு வருகின்ற முதற் சந்தர்ப்பத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு சமூகமளித்து அவர்களது உயிரியல் தரவுகளை (கைவிரல் அடையாளம்) வழங்குவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதனால் இந்த நடவடிக்கை எதிர்வரும் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2. இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்ற கடவுச்சீட்டுகளுக்கு உரிய விண்ணப்பங்கள் இணையத்தளத்தின் ஊடாக தொடரறா (online) முறையில் பதிவு செய்து கொள்ளுவதற்கான புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்.

# 02 : 5 தபால் கிளை

## கிளையின் நோக்கமும் பணிகளும்.

சாதாரண சேவையின் கீழ் தயாரிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்களை விண்ணப்பதாரிகளுக்கு தாமதமின்றி தபால் மூலம் அனுப்பி வைத்தல் இக் கிளையின் நோக்கமாகும்.

- அவ்வாறே சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்குரிய கடவுச்சீட்டுக்கள் கணினிப் பிரிவின் ஊடாகக் கிடைத்ததன் பின்னர் பட்டியலிட்டு உரிய விண்ணப்பதாரியின் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல்.

- சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்குரிய கடவுச்சீட்டுக்கள் உரிய தினத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்காத பட்சத்தில் அவசரத் தேவையின் நிமித்தம் பெற்றுக் கொள்ளுவதற்காக வருகின்ற விண்ணப்பதாரிகளுக்கு "அன்றைய தினமே விநியோகிக்கின்ற திட்டம்" ஊடாக கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து வழங்குதல்.

- பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்கள் முகவரி மாற்றத்தின் அடிப்படையில் அல்லது அதனை ஒப்படைக்கப்படாத பட்சத்தில் மீளக் கிடைக்கப் பெற்றதன் பின்னர் விண்ணப்பதாரி சமூகமளித்து வினவும் போது அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு ஒப்படைத்தல்.

## பணியாட் தொகுதி - 2017

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| காவலாளி | 01 |
| அலுவலக உதவியாளர் | 02 |

## 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றிய பணிகள்

ஒவ்வொரு மாதமும் தபால் செய்யப்பட்ட கடவுச்சீட்டுகள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மாதம் | தபால் செய்யப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017 | ஜனவரி | 9188 |
| 2017 | பெப்ரவரி | 9260 |
| 2017 | மார்ச்சு | 7416 |
| 2017 | ஏப்ரல் | 7484 |
| 2017 | மே | 10926 |
| 2017 | ஜுன் | 7318 |
| 2017 | ஜுலை | 7320 |
| 2017 | ஆகஸ்ட் | 8726 |
| 2017 | செப்தெம்பர் | 8511 |
| 2017 | ஒக்தோபர் | 11705 |
| 2017 | நவம்பர் | 9379 |
| 2017 | திசெம்பர் | 7473 |
| மொத்தம் | | 104706 |

### தபால் செய்யப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 2013 – 2017

| ஆண்டு | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| கடவுச்சீட்டு எண்ணிக்கை | 70961 | 69768 | 71817 | 104867 | 104706 |




## சேவை இல்லம்

கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளல் உட்பட திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற பல்வேறுபட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக நாளாந்தம் சுமார் 5000 பேர் வருகை தருவதுடன் சேவை பெறுநர்களுடன் அவர்களது உதவிக்காக வருகின்றவர்களுக்கும் சேவை பெறுநர்களின் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யும் வரைக்கும் தரித்து நிற்பதற்கு சகல வசதிகளையும் கொண்ட “சேவை இல்லம்” என்னும் பெயரில் பிரதான அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் கீழ் மாடியில் உள்ள இடமொன்றில் இச் சேவை இல்லமானது மனங்கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தமது சேவையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மட்டுமன்றி விண்ணப்பங்களை விநியோகித்தல் மற்றும் பூர்த்தி செய்தல், புகைப்படச் சேவை, நிழல்படப் பிரதி சேவை, கூரியர் சேவை மட்டுமன்றி தேவையான ஏனைய சேவைகளுக்கான வசதிகள் ( தொலைபேசி, வங்கி, உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளல்) இங்கு மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள சேவைகளாகும்.






## 03.கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு)/ பிரதி ஆணையாளர் (இந்தியா இலங்கை) அவர்களின் மேற்பார்வையில் கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை, இந்தியா இலங்கை பிரஜைகள் கிளை மற்றும் சட்டக் கிளை ஆகிய கிளைகள் இப்பிரிவின் கீழ் இயங்குகின்றன.

### 03 :1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுத்தல் பணிகளை மிகவும் திட்டமிட்டவாறும் சிறந்த விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தியும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இந்தக் கிளை நிறுவப்பட்டுள்ளது. திணைக்களத்தின் அடிப்படைப் பணிகளை நிறைவேற்றும் போது ஏற்புடைய கொள்கைகள்/திட்டமிடல்களை வகுத்தல், திணைக்களத்துக்குரிய சட்டங்கள், சட்ட விதிகளின் திருத்தங்கள், சுற்றறிக்கைகள், மற்றும் நடைமுறைத் திட்டங்களை வகுத்தல் அத்துடன் விநியோகித்தல், நிருவாக அறிக்கை, முன்னேற்ற அறிக்கை மற்றும் வருடாந்த திட்டமிடல்களை வகுத்தல், நெறிப்படுத்தல் கையேடுகளை தயாரித்தல் மற்றும் இற்றைவரைப்படுத்தல் இந்தக் கிளையின் முக்கிய பணிகளாகும்.

பணியாட் தொகுதி - 2017

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| கடவுச்சீட்டு உதவியாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் | 01 |

## 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றிய பணிகள்,

01. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தைத் (Action Plan) தயாரித்தல்.
02. 2016ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
03. திணைக்களத்தின் ஊடாக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
மிரிஹான தடுப்பு முகாமில் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுதல் ( 2013 – 2017 வரை)

| இனத்தவர் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| தென் கொரியா | 02 | - | 01 | - | 03 |
| இந்தியா | 131 | 51 | 39 | 75 | 247 |
| துருக்கி | - | 03 | 01 | - | 05 |
| ஜேர்மனி | - | 02 | 01 | 02 | 04 |
| துர்க்மேனிஸ்தான் | - | - | - | - | 01 |
| பாகிஸ்தான் | 08 | 10 | 41 | 09 | 25 |
| ஈராக் | - | - | 13 | 02 | 01 |
| சீனா | 06 | 05 | 49 | 04 | 86 |
| கனடா | - | 02 | - | 01 | 01 |
| பிரான்ஸ் | - | 01 | 02 | - | 02 |
| ரஷ்யா | 01 | 02 | 04 | 01 | 23 |
| செக் | - | - | - | - | 05 |
| இத்தாலி | - | - | - | - | 05 |
| பிரித்தானியா | 03 | 02 | - | 01 | 02 |
| நைஜீரியா | 10 | 03 | 05 | 03 | 21 |
| டென்மார்க் | - | - | - | - | 01 |
| சவுதி | - | - | - | - | 02 |
| உஸ்பெகிஸ்தான் | - | - | 01 | - | 09 |
| பங்களாதேஷ் | 82 | 08 | 44 | 46 | 12 |
| இந்தோனேசியா | 01 | - | - | - | 01 |
| தாயிலாந்து | 02 | - | 10 | 01 | 12 |
| அவுஸ்திரேலியா | 01 | - | - | 02 | 02 |
| போர்த்துக்கள் | - | - | - | - | 01 |
| மொரோக்கோ | - | - | - | - | 02 |
| யேமன் | - | - | 01 | 01 | 02 |
| யுக்ரைன் | - | 01 | 06 | 02 | 03 |
| நேபாளம் | 02 | - | - | - | 03 |
| எகிப்து | - | - | - | - | 01 |
| ஈரான் | 08 | 09 | 12 | 04 | 16 |
| ஐரிஸ் | - | 01 | - | - | 01 |
| ஜப்பான் | - | - | - | - | 01 |
| மலேசியா | 01 | - | 01 | 01 | 02 |
| மாலைதீவு | 05 | 01 | - | - | 02 |
| மியன்மார் | 96 | 07 | - | - | 02 |
| பலஸ்தீனம் | 03 | 03 | 04 | - | 01 |
| சியாராலியோன் | - | - | - | - | 01 |
| சோமாலியா | - | - | 02 | - | 02 |
| தாய்வான் | - | - | - | - | 03 |
| தஜிகிஸ்தான் | - | - | - | - | 01 |
| ஆப்கானிஸ்தான் | 07 | - | 01 | - | - |
| கெமரூன் | 07 | - | 01 | - | - |
| கினியா | 04 | - | - | - | - |
| லைபீரியா | 02 | 01 | - | - | - |
| மாலி | 02 | 02 | 01 | - | - |
| மொசாம்பிக் | 01 | - | - | - | - |
| பிலிப்பைன்ஸ் | 01 | - | - | - | - |
| சிரியா | 10 | 07 | 03 | - | - |
| எதித்திரியா | - | 02 | - | - | - |
| ஸ்பெயின் | - | 01 | - | - | |
| ஆமேனியா | - | - | 01 | - | - |
| கசகஸ்தான் | - | - | 01 | - | - |
| லெபனான் | - | - | 01 | 03 | - |
| சுவீடன் | - | - | 02 | 01 | - |
| ஜோர்ஜியா | - | - | 03 | - | - |
| கானா | - | - | 03 | - | - |
| நெதர்லாந்து | - | - | 01 | - | - |
| தென் கொரியா | - | - | 01 | - | - |
| சூடான் | - | - | 01 | - | - |
| அசர்பைஜான் | - | - | 01 | - | - |
| சிங்கப்பூர் | - | - | 01 | - | - |
| மொத்தம் | 402 | 124 | 259 | 159 | 514 |

விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 2013 - 2017

| மாதம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 30 | 61 | 54 | 73 | 36 |
| பெப்ரவரி | 31 | 50 | 74 | 43 | 64 |
| மார்ச்சு | 53 | 98 | 103 | 50 | 89 |
| ஏப்ரல் | 32 | 88 | 59 | 72 | 48 |
| மே | 17 | 29 | 93 | 46 | 75 |
| ஜுன் | 18 | 52 | 46 | 56 | 56 |
| ஜுலை | 64 | 41 | 64 | 77 | 72 |
| ஆகஸ்ட் | 25 | 11 | 39 | 89 | 112 |
| செப்தெம்பர் | 18 | 30 | 37 | 109 | 88 |
| ஒக்தோபர் | 9 | 45 | 48 | 57 | 29 |
| நவம்பர் | 50 | 39 | 41 | 61 | 82 |
| திசெம்பர் | 43 | 24 | 41 | 23 | 42 |
| **மொத்தம்** | **390** | **568** | **699** | **756** | **793** |

**ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் (UNHCR) பதிவு செய்து கொள்ளுவது தொடர்பான தரவுகள்**

2005 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமும் செய்து கொண்ட உடன்படிக்கை மற்றும் அதனடிப்படையிலான செயற்பாட்டுத் திட்டம் (Working Arrengement ) 2006 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன் கீழ் மூன்றாம் நாடொன்றின் அகதி அந்தஸ்தை எதிர்பார்க்கின்ற ஆட்களுக்கு இலங்கைக்கு வந்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் பதிவு செய்து இலங்கையில் இருந்து பிற நாட்டின் அகதிகள் அந்தஸ்த்தைப் பெற்று இலங்கையிலிருந்து வெளியேறும் வரைக்கும் தரித்து நிற்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 2017.12.31 ஆந் திகதியாகும் போது UNHCR நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 1450 ஆகும். இந்த எண்ணிக்கையில் 822 பேர் பிற நாடுகளுக்கு வசிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 628 பேர் இன்னும் இந்த அந்தஸ்தை எதிர்பார்த்து இந்நாட்டில் தரித்து நிற்கின்றனர்.

அகதிகள் அந்தஸ்த்தை கோரியோரின் எண்ணிக்கை (Asylum – Seekers) - 2017.12.31 ஆந் திகதிக்கு

| இனத்தினர் | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாகிஸ்தான் | 536 |
| ஆப்கானிஸ்தான் | 58 |
| ஈரான் | 11 |
| யேமன் | 9 |
| மாலைதீவு | 4 |
| நைஜீரியா | 4 |
| எதித்திரியா | 2 |
| மியன்மார் | 1 |
| நேபாளம் | 3 |
| மொத்தம் | 628 |

அகதிகள் அந்தஸ்த்தை பெற்றுக் கொண்டோர் எண்ணிக்கை (Refugees) - 2017.12.31 ஆந் திகதிக்கு

| இனத்தினர் | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாகிஸ்தான் | 600 |
| ஆப்கானிஸ்தான் | 133 |
| மியன்மார் | 35 |
| சிரியா | 14 |
| யேமன் | 12 |
| ஈரான் | 8 |
| மாலைதீவு | 8 |
| பலஸ்தீனம் | 10 |
| சோமாலியா | 1 |
| டியுனீசியா | 1 |
| மொத்தம் | 822 |

அகதிகள் அந்தஸ்த்தைப் பெற்றவர்களுக்கிடையே உள்ள 35 மியன்மாரைச் சேர்ந்தவர்களில் 31 பேர் 2017.04.30 ஆந் திகதி வடக்குப் பிரதேச கடலில் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட "ரோஹிங்யா" என்னும் இனத்தைச் சேர்ந்தவர்களாகும். இதற்குரியவாறு 2017.07.26 ஆந் திகதி மல்லாகம் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக இவர்கள் 2017.08.11 ஆந் திகதி மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டுக்குள் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 பாகிஸ்தானியர்கள், ஒரு ஈரானியர் மற்றும் ஒரு ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் அகதிகளாக ஏற்றுக் கொண்டதன் பின்னர் UNHCR நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

2017 ஆம் ஆண்டு சர்வதேச அகதிகள் பற்றிய சட்டம் மற்றும் அகதிகள் தொடர்பான உலகளாவிய அதிகரிப்பு தொடர்பில் UNHCR நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட மூன்று, ஒரு நாள் செயலமர்வுகள் கொழும்பு Cinnamon Grand ஹோட்டலில் நடைபெற்றதுடன் இதில் 07 உதவிக் கட்டுப்பாட்டாளர்கள் 48 குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

2017 ஆம் ஆண்டு நிறைவேற்றிய விசேட பணிகள்

1. பயணிகள் கப்பல் இலங்கைக்கு வரும்போது பயணிகளுக்கான இசைவாக்கப் பணிகளை அறிமுகப்படுத்தல். (On-board Cleararance).

   2016 ஆம் ஆண்டு இறுதியாகும் போது இலங்கைக்கு கப்பல் மூலம் வருகை தரும் உல்லாசப் பிரயாணிகள் அதிகரித்துக் காணப்பட்டனர். குறிப்பாக கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் இதற்கான மிகவும் கவரப்பட்ட துறைமுகங்களாக இருந்தன. பயணிகள் கப்பல் ஒன்றில் 500 தொடக்கம் 3000 வரையிலான உல்லாசப் பிரயாணிகள் அழைத்து வரப்படுவதுடன் பயணிகளின் இசைவாக்கப் பணிகளை உரியவாறு வழங்கப்படுவதற்கான வசதிகள் துறைமுக வளாகத்தில் இருக்கவில்லை

   இதற்கான தீர்வாக 500 உல்லாசப் பயணிகளுக்கு அதிகமானவர்களை அழைத்து வருகின்ற கப்பல்களுக்காக இந்தக் கப்பல்கள் இலங்கை துறைமுகங்களில் நங்கூரமிடுவதற்கு முன்னர் பயணிகளின் இசைவாக்கப் பணிகளை மேற்கொள்ளும் நடைமுறைத்திட்டமொன்றை குடிவரவு

குடியகல்வுத் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு ஆரம்ப கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நடைமுறைத் திட்டம் அறிமுகப்படுத்தியதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள வெளிநாட்டவர்கள் மட்டுமன்றி கறை நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள பயணிகள் தொடர்பில் முன்னதாகவே அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அதேபோன்று துறைமுகங்களுக்குள் வருகின்ற கப்பல்கள் மற்றும் பயணிகள் தொடர்பிலான சரியான தரவுகளைச் சேகரித்துக் கொள்ள முடிந்ததுடன் உல்லாசப் பிரயாணிகளுக்கு மிகச்சிறந்த வினைத்திறனுடனான சேவையினையும் வழங்க முடிந்தது.






“celebrity constellation” பயணிகள் கப்பலுக்குள்ளேயே பயணிகளின் இசைவாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2. வெளிநாட்டு குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்களினால் குறித்த நாடுகளில் சட்டவிரோதமாக தங்கியிருக்கின்ற வெளிநாட்டவர்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் பற்றி இலங்கை குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை இதற்கமைவாக கனடா அரசாங்கத்தின் அனுசரணையுடன் குறித்த நாட்டின் குடிவரவு குடியகல்வு விசாரணை செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் மூன்று கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் இரண்டாவது கட்டம் 2018 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## 04:4 மனித வியாபாரத்தை ஒழிக்கும் தேசிய வள நிலையம் (NCHTRC)

2015 – 2019 மனித வியாபாரத்தை ஒழிப்பதற்கான திறமுறையான திட்டத்துக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. இதற்காக நீதி அமைச்சின் தலைமையில் தாபிக்கப்பட்ட மனித வியாபாரத்துக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பின் நெறிப்படுத்தலின் மூலம் தயாரிக்கப்பட்ட குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல் மற்றும் பாதுகாத்தல் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைத்திட்டத்துக்கு பாராளுமன்றமும் பங்களிப்புச் செய்தது.

மேலும் நீதி அமைச்சின் மேலே குறிப்பிட்ட விடயங்களுக்கு உரியதான கூட்டங்களில் கலந்து கொண்டதன் மூலம் இத் திணைக்களத்தினால் மனித வியாபாரத்துக்கு எதிராக எடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு மேலே குறிப்பிட்ட விடயங்களுக்கு உரியதான ஏனைய திணைக்களங்களுக்கும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் ஒத்துழைப்பு வழங்கியது.

மனித வியாபாரம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக எமது திணைக்களத்தின் நெறிப்படுத்தலின் மீது நீதி அமைச்சினதும், சட்டமா அதிபர் திணைக்களத்தினதும், கனடா உயர்ஸ்தானிகராலயத்தினதும், சர்வதேச இடம்பெயர்ந்தோர் தொடர்பான அமைப்பினதும் மற்றும் அவுஸ்திரேலியா

உயர்ஸ்தானிகராலயத்தினதும் ஒத்துழைப்புடன் பயிற்சிப் பிரிவின் நெறிப்படுத்தலில் 150 குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கும் 20 உதவிக் கட்டுப்பாட்டாளர்களுக்கும் மனித வியாபாரத்தை ஒழிப்பது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

## 2017 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள்

மனித வியாபாரம் தொடர்பில் அறிவுறுத்துவதற்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெவ்வேறாக அச்சிடப்பட்ட மூன்று பதாதைகள் மக்கள் நடமாட்டமுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாக முன்பக்கத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டது.










## 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பணிகள்

- மனித வியாபாரம் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்காக துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நீதி அமைச்சின் மனித வியாபாரத்தை ஒழிக்கும் படையணிக்கு வழிகாட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மனித வியாபாரத்துக்கு உரியதான சட்ட விதிகள் தொடர்பில் குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிப்பதற்காக பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.

# 05. பிரஜாவுரிமைப் பிரிவு

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தால் நியதிச்சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரஜாவுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறைவேற்று அதிகாரம் நேர்வரிசை அமைச்சின் அமைச்சுச் செயலாளருக்கே உண்டு. பிரஜாவுரிமைச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிறைவேற்று நடைமுறைத்திட்டங்கள் குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்தால் நிருவகிக்கப்படுகின்ற வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக கடவுச்சீட்டுகளை வழங்கும் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபடுவதனால் பிரஜாவுரிமைப் பிரிவு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது. அமைச்சு செயலாளரின் நிறைவேற்று அதிகாரம் உதவிச் செயலாளர் ஒருவர் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இந்த அதிகாரமும் பிரஜைகள் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளரினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏனைய பணியாட் தொகுதியினர் பின்வருமாறு.

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| உதவிக் கட்டுப்பாட்டாளர் | 2 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 1 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 24 |
| அலுவலக உதவியாளர் | 5 |

### பணிகள்

பிரஜாவுரிமைப் பிரிவின் ஊடாக 1948 ஆம் ஆண்டின் 18 இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ள அடிப்படை விடயங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- <u>சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமையை பதிவு செய்தல்.</u>
  ஒருவர் அல்லது இருவருமே இலங்கையர்களாக இருக்கும் பெற்றோருக்கு வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுகின்றனர்.

- <u>சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் இலங்கை பிரஜாவுரிமையை மீள வழங்குதல்.</u>
  வெளிநாடொன்றில் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டதன் காரணத்தால் இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்தோருக்கு மீண்டும் இலங்கை பிரஜாவுரிமையை பெற்றுக் கொடுப்பதற்கான பணிகளை நிறைவேற்றுதல்.

- <u>சட்டத்தின் 11 ஆம் பிரிவுக்கு உரியவாறு நடவடிக்கை எடுத்தல்.</u>
  தாய் அல்லது தந்தை இலங்கையராக இருக்கும், சட்டத்தில் 5(2) பிரிவின் கீழ் பதிவு செய்வதை 22 வயது வரை மேற்கொள்ளத் தவறிய ஒருவர் இப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுவார்.

- <u>சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு உரியவாறு நடவடிக்கை எடுத்தல்.</u>
  இலங்கைப் பிரஜையை வாழ்க்கைத் துணையாக திருமணம் செய்யும் வெளிநாட்டுப் பெண்களுக்கான பிரஜாவுரிமை இப்பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றது.

- <u>சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கு உரியவாறு நடவடிக்கை எடுத்தல்.</u>

  விசேட சமூக சேவைகளை நிறைவேற்றிய அல்லது தொழில்சார்ந்த, வர்த்தம் சார்ந்த கைத்தொழிலில் அல்லது விவசாயத் துறையில் தேர்ச்சி பெற்ற ஒருவரான இலங்கையில் சாதாரண பிரஜையொன்றாக வாழும் எதிர்பார்ப்புடன் உள்ள பிரஜாவுரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 12 ஆம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்தில்லாத ஒருவருக்கு இலங்கை பிரஜாவுரிமை இப்பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றது.

- <u>சட்டத்தின் 13(அ) ஆம் பிரிவுக்கு உரியவாறு நடவடிக்கை எடுத்தல்.</u>

  5 வருட செல்லுபடி வீசா அனுமதிப் பத்திரமொன்று அல்லது புறக்குறிப்பு வழங்கப்பட்டுள்ள மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அத்துடன் தொழில்சார்பாளர்கள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வதிவிட வருகை தருவோர் திட்டமொன்றில் பதிவு செய்துள்ள எவரேனும் ஆளொருவருக்கு பதிவின் மூலம் இலங்கை பிரஜாவுரிமை இப்பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றது.

- <u>சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்குதல்.</u>

  19(2) பிரிவின் கீழ் வெளிநாடுகளில் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டதன் காரணத்தால் இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்த ஒருவருவருக்கு குறித்த நாட்டின் பிரஜாவுரிமை இருக்கும் போது இலங்கைப் பிரஜாவுரிமையை மீண்டும் இப்பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றது.

  19(3) பிரிவின் கீழ் வெளிநாடுகளில் வசித்தல் வீசாவில் இருப்போருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இருக்கும் போதே குறித்த நாட்டுக்கான இரட்டைக் குடியுரிமையை வழங்குதல்.

- <u>சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு உரியவாறு நடவடிக்கை எடுத்தல்.</u>

  20(1) பிரிவின் கீழ்1948.11.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்த ஒருவராயின் அத்துடன் குறித்த திகதிக்கு வேறு நாட்டின் பிரஜையாக இருப்பின், 1952.12.31 ஆந் திகதி அல்லது குறித்த ஆளுக்கு 22 வயதாகும் திகதி ஆகியவற்றில் இரண்டில் குறித்த ஆள் தொடர்பில் பிந்தி வரக்கூடிய திகதியில் வேறு நாட்டின் குடியுரிமையை குறித்த நாட்டின் சட்டத்தின் பிரகாரம் கைவிட்டு உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும் அல்லாத பட்சத்தில் இலங்கை பிரஜையாக இருப்பதை முடிவுறுத்துதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்

  20(2) பிரிவின் கீழ் ஆளொருவர் பரம்பரையாகவே இலங்கை பிரஜையாக இருக்கும் அத்துடன் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதனால், குறித்த ஆளினால் பிறப்பு இடம்பெற்ற போது அல்லது அதன் பின்னர் ஏதும் பிற நாடொன்றின் பிரஜையாக இருப்பின் 1952.12.31 ஆந் திகதி அல்லது அவ்வாறான வேறு நாடொன்றின் பிரஜையாக இருக்கும் திகதி தொடக்கம் ஒரு வருடம் கடந்து அடுத்து வரும் திகதி தொடக்கம் அல்லது குறித்த ஆளுக்கு 22 வயதாகும் திகதி ஆகியவற்றில் இரண்டில் குறித்த ஆள் தொடர்பில் பிந்தி வரக்கூடிய திகதியில் வேறு நாட்டின் குடியுரிமையை குறித்த நாட்டின் சட்டத்தின் பிரகாரம் கைவிட்டு உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும் அல்லாத பட்சத்தில் இலங்கை பிரஜையாக இருப்பதை முடிவுறுத்துதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

  20(3) பிரிவின் கீழ் பரம்பரையாகவே இலங்கைப் பிரஜையாக இருக்கும் ஆளொருவர் சொந்த விருப்பத்தின் பேரில் வேறு நாடொன்றின் பிரஜையாக இருக்கும் பட்சத்தில் அவரின் இலங்கை பிரஜாவுரிமை இரத்தாகுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

20(4) பிரிவின் கீழ் இலங்கை பிரஜாவுரிமைக்காக மீண்டும் விண்ணப்பிக்கும் ஒருவரினால் தனது சுய வெளிநாட்டு பிரஜாவுரிமையை 03 மாத காலப் பகுதிக்குள் கைவிடாத பட்சத்தில் அவரின் இலங்கை பிரஜாவுரிமை இரத்தாகுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### பிரஜாவுரிமை சட்டத்துக்கு அமைவாக 2013.01.01 தொடக்கம் 2017.12.31 வரை வழங்கிய சான்றிதழ்கள்

| பிரிவு | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 5(2) ஆம் பிரிவு | 13,932 | 8,450 | 7,320 | 8,276 | 12904 | 50,882 |
| 8 ஆம் பிரிவு | 2 | 5 | 1 | 12 | 6 | 26 |
| 11 ஆம் பிரிவு | 7 | 22 | 48 | 51 | 46 | 174 |
| 12 ஆம் பிரிவு | 9 | 10 | 16 | 8 | 6 | 49 |
| 19(2)/ 19(3) ஆம் பிரிவு | 380 | 255 | 4,373 | 17,544 | 10,648 | 33,200 |
| 20 ஆம் பிரிவு | – | – | 72 | 108 | 94 | 274 |
| மொத்தம் | 14,330 | 8,742 | 11,830 | 25,999 | 23,704 | 84,605 |






## இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குதல். 2015 – 2017

| விபரம் | 2015 | 2016 | 2017 | மொத்தம் |
|---|---|---|---|---|
| பிரஜாவுரிமைச் சட்டத்தின் 19(2) பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமையை மீண்டும் பெற்றுக் கொள்ளல். | 2,027 | 9,418 | 5,113 | **16,558** |
| பிரஜாவுரிமை சட்டத்தின் 19(3) பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமையை தக்க வைத்திருத்தல். | 1,103 | 8,126 | 5,535 | **14,764** |
| மொத்தம் | **3,130** | **17,544** | **10,648** | **31,322** |

## 2017 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள், வெற்றிகள் மற்றும் சவால்கள்

1. 1948 ஆம் ஆண்டின் 18 சட்டத்தின் 19 பிரிவின் கீழ் இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்குவதற்கான புதிய நடைமுறைத் திட்டத்தின் கீழ் 2015.03.23 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கமைவாக 2017 ஆம் ஆண்டுக்குள் "சுஹுருபாய" கட்டடத்தின் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் 07 தடவைகளில் மிகவும் விமர்சையாக 10,648 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன






அනු අංකය / தொடர் எண் / Serial No. A 219816

පුරවැසි/ශු/7/19(2)

අංකය / இல. / No. 1600176701

ද්විත්ව පුරවැසි සහතිකය

இரு நாட்டுக் குடியுரிமைச் சான்றிதழ்

DUAL CITIZENSHIP CERTIFICATE

පුරවැසි පනතේ 19(3) වගන්තිය යටතේ ප්‍රකාශය

குடியுரிமைச் சட்டத்தின் 19(3)ம் பிரிவின் கீழான பிரகடனம்

(a)......................................................என்னுமிடத்தைச் சேர்ந்த (b)...................................................என்பவர் அவர் தொடர்பில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள விபரங்களைச்சார்ந்த இலங்கையல்லாத வேறொரு நாட்டின் பிரஜாவுரிமையை அவர் பெற்றுக்கொண்டிருக்கின்ற போதிலும் இலங்கைப் பிரசையொருவர் என்ற அந்தஸ்தை அவர் தம்வசம் வைத்துள்ளார் என (349ம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் பிரிவு 19(3) என்பதன் கீழான வெளிப்படுத்துகை ஒன்றுக்காக விண்ணப்பித்துள்ளாராதலாலும்;

அத்துடன் சொல்லப்பட்ட (b)..........................என்பவர் சொல்லப்பட்ட பிரிவு 19(3) என்பதன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரென அமைச்சர் திருப்திப்பட்டுள்ளாராதலாலும்;

ஆகவே இப்பொழுது, 1987ன் 45ம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1948ன் 18ம் இலக்க பிரசாவுரிமைச் சட்டத்தின் 19(3) பிரிவினால் தனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி வெளிப்படுத்துகை திகதி (c)..................லிருந்து சொல்லப்பட்ட (b).................................என்பவர் இலங்கைப் பிரசையொருவர் என்ற அந்தஸ்தை தம்வசம் வைத்துள்ளார் என அமைச்சர் வெளிப்படுத்துகின்றார்.

இதற்கு சாட்சியாக நான் கீழே ஒப்பமிட்டுள்ளேன்.

**Declaration under Section 19 (3) of the Citizenship Act,**

Where as (b) **WALISARAGE ANSLEM VIRAJ FERNANDO** of (a) **AUSTRALIA** has applied for a declaration under Section 19(3) of the Citizenship Act, (Chapter 349) that he has retained the status of a citizen of Sri Lanka although he is acquiring the citizenship of a country other than Sri Lanka alleging with respect to himself the particulars set out overleaf.

And whereas the Minister is satisfied that the said **WALISARAGE ANSLEM VIRAJ FERNANDO** has complied with the requirements of the said Section 19 (3).

Now therefore, in pursuance of the powers conferred on him by the said section 19(3) of the citizenship No. 18 of 1948 as amended by Act No. 45 of 1987 the Minister declares that with effect from (c) **11th AUGUST 2016** the said (b) **WALISARAGE ANSLEM VIRAJ FERNANDO** has retained the status of a citizen of Sri Lanka.

In witness where of I have hereunto subscribed by name.

D. SWARNAPALA
ලේකම්/செயலாளர்/ Secretary
Ministry of Internal Affairs,
Wayamba Development & Cultural Affairs

S.B. NAWINNE
අමාත්‍යවරයා/அமைச்சர்/ Minister
Ministry of Internal Affairs,
Wayamba Development & Cultural Affairs

දිනය/திகதி /Date : **13th JANUARY 2017**

Ministry of Internal Affairs ,Wayaba Development & Cultural Affairs, Colombo

CM 022682 – 10,000 (2016/06) Dept. of Govt. Printing, Sri Lanka

2. 2017 ஆம் ஆண்டுக்குள் இரட்டை பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பான 30,004 கோப்புகள் மற்றும் 5(2) பிரிவின் கீழான 19,540 கோப்புகள் ஸ்கேன் செய்யப்பட்டன.



# 06. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இப் பிரிவு இயங்குகின்றது.

பணியாட் தொகுதி

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| உதவிக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 06 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| கடவுச்சீட்டு உதவியாளர் | 03 |
| அலுவலக உதவியாளர் | 01 |

தற்பொழுது பயன்பாட்டிலுள்ள மென்பொருள் மற்றும் வன்பொருள் முறைமைகளை தடையின்றி பேணுதல் அத்துடன் மக்களுக்கு உச்ச சேவைகளையும் அரசாங்கத்துக்கு சிறந்த ஆகுசெலவை பெற்றுக் கொள்ளக்கூடியவாறான புதிய நடைமுறைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி திணைக்களத்தின் தகவல் முறைமையை மேம்படுத்துவது இந்த தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அடிப்படைப் பொறுப்பாகும்

அத்துடன், இத் திணைக்களத்தின் கணினி முறைமைக்காக சேவை வழங்குகின்ற வெளி நிறுவனங்களுடன் முறையானவாறு உடன்படிக்கையை இற்றைவரைப்படுத்தல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதை மேற்பார்வை செய்தலும் இப் பிரிவின் ஏனைய பணிகளாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைப் பணிகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட பணிகளும் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1)

- மக்கள் தேவை தொடர்பில் உணர்வுபூர்வமாகச் செயல்பட்டு இருக்கின்ற ஐந்து கணினி மென்பொருள் மொடியுலர்களில் அடையாளம் காணப்பட்ட மேம்படுத்த வேண்டியவற்றைச் செய்து சேவையின் விளைவுப் பெருக்கத்தை அதிகரிக்கச் செய்தல்.
- திணைக்களத்துக்காக புதிய வெப் தளமொன்றை உருவாக்குதல்.
- புதிய கணினி உபகரணங்களைக் கொள்வனவு செய்து, மிகச் சிறந்த சேவைகளை வழங்கும் நோக்கில் உள்ள மென்பொருள் மற்றும் வன்பொருள் முறைமைகளை மேம்படுத்துதல் (Upgrade).

**2) காணாமல் போன, களவாடப்பட்ட கடவுச்சீட்டுகள் அலகு (SLTD)**

காணாமல் போன, களவாடப்பட்ட கடவுச்சீட்டுகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களினால் வழங்குகின்ற தகவல்களை மத்திய தகவல் பணியகம் அல்லது வெளிநாட்டு தூதரகங்களினால் நேரடியாக அல்லது திணைக்களத்துக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இவற்றை விசாரணை செய்து குறித்த கடவுச்சீட்டை மீண்டும் பயன்படுத்த முடியாதவாறு இரத்துச் செய்து, சர்வதேச பொலிஸாருக்கு (INTERPOL) அறிவிக்கப்படுகின்றன. இவ்வாறான கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி வேறு ஆட்கள் வெளிநாடு செல்லுவதை தடுக்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாறான சட்டவிரோத செயல்களைத் தடுப்பதே (SLTD) முறைமையின் பிரதான நோக்கமாகும்.

2017.01.01 ஆந் திகதி தொடக்கம் 2017.12.31 ஆந் திகதி வரை மத்திய தகவல் பணியகம் (NCB) மற்றும் வெளிநாட்டு தூதரகங்களினாலும் (SLDM) 9033 கடவுச்சீட்டுகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 2480 கடவுச்சீட்டுகள் சர்வதேச பொலிஸ் தரவு முறைமைக்கு அனுப்பப்பட்டது.

**3) ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவ அலகு (IEMS)**

குடிவரவு, குடியகல்வு தொடர்பான தகவல்களையும், புள்ளி விபரங்களையும் வழங்குவதற்காக ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவ அலகு (IEMS) நிறுவப்பட்டது. இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டு தூதரங்களை நேரடியாக இவ் அலகுடன் தொடர்பு கொள்ளுவதுடன் தேவையான போது வீசா வழங்குவதற்கு முன் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகள் தொடர்பிலான உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுவதும் இந்த அலகினால் மேற்கொள்ளப்படுகின்ற பணியாகும். 2017.01.01 தொடக்கம் 2017.12.31 ஆந் திகதி வரை திணைக்களத்தின் ஊடாக 1736 விளக்க விசாரணைகளுக்கான பதில்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் கடவுச்சீட்டுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை

| | நிறுவனம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜேர்மன் தூதரகம் | 683 | 469 | 222 | 100 | 21 |
| 2 | பிரான்ஸ் தூதரகம் | 248 | 88 | 104 | 86 | 29 |
| 3 | நோர்வே தூதரகம் | 334 | 86 | 161 | 16 | 7 |
| 4 | சுவிஸ்லாந்து தூதரகம் | 201 | 302 | 384 | 336 | 253 |
| 5 | அமெரிக்க தூதரகம் | 294 | 359 | 86 | 69 | 23 |
| 6 | இத்தாலி தூதரகம் | 65 | 15 | 23 | 9 | 21 |
| 7 | அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் | 394 | 104 | 42 | 137 | 197 |
| 8 | கனடா உயர்ஸ்தானிகராலயம் | 717 | 133 | 52 | 17 | 99 |
| 9 | ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகராலயம் | 405 | 183 | 182 | 169 | 406 |
| 10 | நெதர்லாந்து தூதரகம் | 2 | 3 | 1 | 2 | - |
| 11 | தாய்லாந்து தூதரகம் | - | - | 5 | 2 | 1 |
| 12 | ஜப்பான் தூதரகம் | 2 | - | - | - | - |
| 13 | இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் | 2 | 2 | 1 | - | - |
| 14 | இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பிரித்தானியா | 643 | 872 | 911 | 955 | 661 |
| 15 | இலங்கை உயர்ஸ்தானிகராலயம் புதுடில்லி | 4 | - | - | - | - |
| 16 | இலங்கை மத்திய வங்கியின் உளவுப் பிரிவு | - | 5 | 11 | 23 | 16 |
| 17 | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 17 | 9 | 4 | 4 | 2 |
| 18 | தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் | - | - | - | 7 | - |
| | மொத்தம் | 4011 | 2630 | 2189 | 1932 | 1736 |

## 4) மீளப் பொறுப்பெடுத்தல் சிக்கல் முகாமைத்துவ முறைமை. (RCMS)

வெளிநாட்டிலிருந்து வெளியேற்றப்படும் இலங்கையர் தொடர்பில் அந்தந்த நாடுகளில் அமைந்துள்ள தூதரகங்கள் ஊடாக அவர்களது இலங்கையருக்கான அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் உரிய தரவுகள் மற்றும் தகவல்களை கணினி முறைமையின் ஊடாக இத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இந்தக் கணினி முறைமையில் திணைக்களத்துக்குரிய கடவுச்சீட்டுகளின் தரவுகள் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தரவுகளை பயன்படுத்தி இறுதியாக உரிய ஆளின் இலங்கையருக்கான அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தற்காலிக பயண ஆவணமொன்றை (Tempary travel document) வழங்குவதற்கான சிபாரிசு செய்யப்படும்.

இதற்கமைவாக கடந்த ஐந்து வருட காலப் பகுதிக்குள் இலங்கை தூதரகத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக பயண ஆவணங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| நாடு | இலங்கை தூதரகத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக பயண ஆவணங்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| அவுஸ்திரேலியா | 258 | 122 | கொள்கைத் தீர்மானத்துக்கமைய 2015 ஆம் ஆண்டு இந்த முறைமை செயற்படவில்லை. | 223 | 271 |
| ஒஸ்ட்ரியா | 7 | 2 | | 0 | 0 |
| பெல்ஜியம் | 21 | 3 | | 0 | 3 |
| கனடா | 75 | 39 | | 25 | 31 |
| பிரான்ஸ் | 82 | 32 | | 34 | 56 |
| ஜேர்மன் | 1 | 0 | | 12 | 27 |
| இந்தோனேசியா | 52 | 31 | | 0 | 0 |
| இத்தாலி | 5 | 3 | | 1 | 0 |
| ஜப்பான் | 42 | 24 | | 55 | 20 |
| கொரியா | 40 | 13 | | 0 | 0 |
| மலேசியா | 0 | 0 | | 0 | 0 |
| நெதர்லாந்து | 7 | 3 | | 2 | 5 |
| நோர்வே | 22 | 3 | | 2 | 6 |
| பிலிப்பைன்ஸ் | 2 | 0 | | 0 | 0 |
| போலந்து | 4 | 5 | | 3 | 55 |
| ரஷ்ய குடியரசு | 9 | 3 | | 5 | 0 |
| சுவீடன் | 19 | 8 | | 17 | 11 |
| சுவிஸலாந்து | 157 | 6 | | 24 | 59 |
| தாய்லாந்து | 26 | 2 | | 0 | 0 |
| துருக்கி | 0 | 0 | | 25 | 57 |
| பிரித்தானியா | 184 | 99 | | 104 | 176 |
| ஐக்கிய இராச்சியம் | 10 | 5 | | 2 | 17 |
| மொத்தம் | 1023 | 403 | - | 534 | 794 |

2018 ஆம் ஆண்டு நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பணிகள்

- தற்போதைய தேவைப்பாட்டுக்கு ஏற்ப பாதுகாப்பை விரிவுபடுத்தல் (Security Enhancement) மற்றும் தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் வசதிகளுடன் (Storage capacity) திணைக்களத்தின் கணினி முறைமையை அபிவிருத்தி செய்தல்.

# 07. கணக்குப் பிரிவு

பிரதம கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் கணக்குப் பிரிவு இயங்குவதுடன் இப் பிரிவின் பணியாட் தொகுதி பின்வருமாறு.

| பதவி/சேவை | எண்ணிக்கை |
|---|---|
| பிரதம கணக்காளர் | 01 |
| கணக்காளர் (வருமானம்) | 01 |
| கணக்காளர் (கொடுப்பனவு) | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் (நிதி) | 01 |
| வரவு செலவுத்திட்ட உதவியாளர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 |
| சிறாப்பர் | 36 |
| அலுவலக உதவியாளர் | 06 |

## நிதி முகாமைத்துவம்

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவம் நிதிப் பிரிவின் பிரதான பணியாகும். வருமானத்தை ஈட்டும் திணைக்களமான இதன் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பிலான முகாமைத்துவம், அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை உரிய எல்லைக்குள் பேணுதல், திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த திணைக்களத்தின் வருடாந்த/மாதாந்த அறிக்கைகளை (வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, ஒதுக்கீட்டுக் கணக்கு, மாதாந்த கணக்குப் பொழிப்பு) ஒழுங்கு செய்து உரிய தினங்களில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதாக நிதி நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிகளாகும்.

## வருமான இலக்கு மற்றும் முன்னேற்றம்

2017 ஆம் ஆண்டு திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமான இலக்கு 15,000 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் 2017 ஆம் ஆண்டு ஈட்டிய மொத்த வருமானம் 15,293 மில்லியன் ரூபாவாகும். 2017 ஆம் ஆண்டு மொத்த வருமான இலக்கையும் தாண்டி 293 மில்லியன் ரூபா வருமான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. 2017 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது வருமான வளர்ச்சி நூற்றுக்கு 1.95 ஆகும்.

2017 ஆம் ஆண்டு திணைக்களம் பிரதான வருமான வழிகளின் ஊடாக ஈட்டிய வருமானங்கள் பின்வருமாறு.

| | வருமானம் (ரூபா) |
|---|---|
| கடவுச்சீட்டுகள் விநியோகம் மற்றும் திருத்தங்கள் | 2,639,465,409.30 |
| வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக கடவுச்சீட்டுப் பணிகள் | 1,325,155,681.24 |
| துறைமுகப் பணிகள் | 68,060,000.00 |
| வீசா வழங்குதல்/ நீடித்தல் | 1,145,079,266.63 |
| இலத்திரனியல் பயண வீசா நிகழ்ச்சித் திட்டம் (ETA) | 8,465,413,734.15 |
| பிரஜாவுரிமைப் பிரிவு | 1,650,184,560.00 |
| மொத்தம் | 15,293,358,651.32 |




## வருமானப் பகுப்பாய்வு 2013 – 2017

| ஆண்டு | மொத்த கடவுச்சீட்டு வருமானம் | வெளிநாட்டு தூதரக வருமானம் | துறைமுகம் | வீசா | இலத்திரனியல் பயண | பிரஜாவுரிமை | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 2,117,015,099 | 1,066,211,883 | 71,397,000 | 751,379,693 | 3,510,925,846 | 35,253,730 | **7,552,183,251** |
| 2014 | 2,133,548,087 | 1,064,296,091 | 72,488,000 | 800,098,823 | 4,034,041,937 | 46,423,010 | **8,150,895,948** |
| 2015 | 2,104,719,692 | 1,027,633,544 | 74,065,000 | 917,471,394 | 5,133,896,060 | 850,008,800 | **10,107,794,490** |
| 2016 | 2,599,994,181 | 1,235,650,754 | 65,763,000 | 1,041,235,094 | 7,810,353,777 | 2,873,651,440 | **15,626,648,246** |
| 2017 | 2,639,465,409 | 1,325,155,681 | 68,060,000 | 1,145,079,267 | 8,465,413,734 | 1,650,184,560 | **15,293,358,651** |
| மொத்த வருமானம் | **11,594,742,468** | **5,718,947,953** | **351,773,000** | **4,655,264,271** | **28,954,631,354** | **5,455,521,540** | **56,730,880,586** |

## 2017 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் (திருத்தப்பட்ட) மற்றும் உண்மையான செலவினங்கள்

2017 ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தின் செலவுக்காக மதிப்பிடப்பட்ட (திருத்தப்பட்ட) ஒதுக்கீட்டின் அளவு 2,168.73 மில்லியன் ரூபாவாகும். இதில் 1,240.53 மில்லியன் ரூபா மீண்டுவரும் செலவினங்களுக்காகவும் 928.20 மில்லியன் ரூபா மூலதனச் செலவினத்துக்காகவும் ஒதுக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டின் மொத்த உண்மையான செலவு 1,796.57 மில்லியன் ரூபாவாகும் எனவும் இதில் 1,235.03 மில்லியன் ரூபா மீண்டுவரும் செலவினங்களுக்காகவும் 561.54 மில்லியன் ரூபா மூலதன செலவினங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டது.

## செலவினக் கட்டமைப்பு - 2017







### நிதி முன்னேற்றங்கள் (செலவினம்) 2017

| நிதி வகைப்படுத்தல் | 2017 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீடு | உண்மையான செலவு | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **1,240,533,000** | **1,235,028,000** | **99** |
| ஆட்களின் வேதனாதிகள் | 580,546,000 | 580,192,000 | 100 |
| பிரயாணச் செலவு | 24,705,000 | 24,695,000 | 99 |
| வழங்கல்கள் | 44,382,000 | 42,684,000 | 96 |
| பராமரிப்புச் செலவு | 170,957,000 | 167,636,000 | 98 |
| ஒப்பந்த சேவைகள் | 406,499,000 | 406,427,000 | 100 |
| ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 13,444,000 | 13,394,000 | 100 |
| **மூலதனச் செலவுகள்** | **928,200,000** | **561,545,000** | **61** |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 19,500,000 | 11,321,000 | 58 |
| மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல் | 570,200,000 | 227,320,000 | 40 * |
| பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | 7,500,000 | 4,120,000 | 55 |
| ஏனைய முதலீடுகள் | 331,000,000 | 318,784,000 | 96 |
| **கூட்டு மொத்தம்** | **2,168,733,000** | **1,796,573,000** | **83** |

* சட்டத்தை வலுப்படுத்தும் வசதிகளுக்கான நிலையமொன்றை கட்டான பிரதேசத்தில் நிருமாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டாலும், அபஇல/17/2198/722/026/ரீபீஆர் இலக்க 2017.11.01 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உத்தேச நிருமாணிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

# 8. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

பிரதம உள்ளக கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் இப் பிரிவு இயங்குகின்றது.

பணியாட் தொகுதி - 2017

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| அலுவலக உதவியாளர் | 01 |

## நோக்கம்

- திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் பேணப்படுகின்ற உள்ளக நிருவாக முறையில் கலந்து கொண்டு குறித்த பணிகளின் தவறுகள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்கும் அவற்றை வெளிக் கொண்டுவருவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற உள்ளக சோதனைகளை முறையாகவும் போதுமான அளவும் தொடர்ச்சியான கணிப்பீடுகளையும் சுயாதீன மதிப்பீடுகளையும் பேணுதல்.
- திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட அல்லது திணைக்களத்தினால் பொறுப்பெடுக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது அத்துடன் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்யும் போது பெற்றுக் கொண்ட முன்னேற்றங்களை உறுதிப்படுத்துவதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் குழுவிற்கு ஒத்தழைப்பு வழங்குதல்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் இப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கும் திணைக்களத் தலைவருக்கும் முன்னேற்ற மீளாய்வுக் குழுவிற்கும் இடையேயான ஒருங்கிணைப்பாளராகச் செயற்படல்.

## பணிகள்

- தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக திணைக்களத்தினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உள்ளக சோதனைகள் மற்றும் நிருவாக முறைத் திட்டம் மட்டுமன்றி உண்மையான செயற்பாடுகள் வெற்றியளித்துள்ளதா என ஆராய்ந்து பார்த்தல்.
- கணக்குகளின் மற்றும் பிற அறிக்கைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என ஆராய்ந்து பார்த்தல்.
- பணியாட் தொகுதிக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் பண்புசார் தன்மையை மதிப்பீடு செய்தல்.
- திணைக்களத்தின் சொத்துக்கள், எல்லாவிதத்திலுமான நட்டங்களில் இருந்தும் எந்தளவு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து பார்த்தல்.
- அரசாங்கத்தின் தாபனவிதிக் கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் பொது நிருவாகத்துக்குப் பொறுப்பான அமைச்சரினாலும் திறைசேரியினாலும் அவ்வப்போது வெளியிட்டுள்ள குறைநிரப்பு அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுகின்றனவா என ஆராய்ந்து பார்த்தல்.

- வீண் விரயம், தேவைக்கு மேற்பட்டதும் தேவையற்றதுமான செலவுகளை தடுப்பது மட்டுமன்றி அவற்றைக் கண்டுபிடிப்பதற்காக தெரிவு செய்யப்படுகின்ற உள்ளக நிருவாகத் திட்டத்தின் வெற்றியை ஆராய்ந்து பார்த்தல்.
- திணைக்களத்தின் கணக்கு நடைமுறைத்திட்டம் மற்றும் ஏதும் நிதிச் செலவுக்கான காரணமாக அமையும் குறித்த தொழிற்பாடுகளை ஆராய்ந்து பார்த்தல் அத்துடன் திணைக்களத்தின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் பாதுகாப்பானவாறு சிக்கனமாகவும் முறையானவாறும் பயன்படுத்தப்படுகின்றனவா என ஆராய்ந்து பார்த்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை நடத்துதல்.
- நுட்பம் அல்லது கணக்கியல் கோணத்திலிருந்து வெளியே சென்று முகாமைத்துவக் கோணத்தில் திணைக்களத்தின் தொழிற்பாட்டுப் பணிகளை ஆராய்ந்து பார்த்தலும் அதுபற்றி அறிக்கையிடலும்.
- வேலைகள், நிகழ்ச்சித் திட்டங்களின் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் அத்துடன் அது தொடர்பிலான வேலைத் திட்டம் மற்றும் நேர அட்டவணைகள் எந்தளவு அதன் இலக்குகளை அடைவதில் ஈடுபட்டுள்ளது என்பதை மதிப்பீடு செய்தல்.
- வேலைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்படுகின்ற தாமதங்களுக்குக் காரணமாகவுள்ள பிரச்சினைகளுக்குரிய துறைகள் தொடர்பில் இற்றைவரைப்படுத்தப்பட்ட தள நுண்ணாய்வுகளை மேற்கொள்ளல்.
- இவ்வாறான தொழிற்பாட்டுப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு பயன்படுத்துகின்ற நிருவாக நடவடிக்கைகளை மதிப்பிடுதல் மற்றும் மீளாய்வு செய்தல்.

## 2017 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றிய விசேட பணிகள்

1. களஞ்சிய நடவடிக்கைகளை முறைப்படுத்தல் சம்பந்தமாக 01/2017 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையை வெளியிட்டமை மற்றும் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் பணியாட் தொகுதிக்கு பயிற்சியளித்தல்.
2. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை பரிசோதனை செய்தல்.

### சவால்கள்

- போதுமான அளவு பணியாட் தொகுதி இல்லாமை.
- நீண்ட காலமாக பணியாட் தொகுதியினர் குறித்த பிரிவில் தரித்து நிற்காமை

## 2017 ஆம் ஆண்டின் இலக்குகளும் முன்னேற்றங்களும்..

2017 ஆம் ஆண்டு செய்வதற்கு எதிர்பார்த்த பணிகளில் 75 % வரையிலான பணிகள் பூர்த்தி செய்ய முடியுமாயின.

## 09. நலனோம்புகை நடவடிக்கைகள்

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் நலன்புரிச் சங்கமானது அங்கத்தவர்களினதும், அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும், திணைக்களத்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக வருகின்ற மக்களினதும், வெளிச் சமூகத்தினதும் நலன் கருதி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துகின்றன. இதில் உடல், உள ஆரோக்கியம் மட்டுமன்றி திருப்திகரமான ஊழியர்களை உருவாக்குவதன் மூலம் மக்களுக்கு பண்புசார் சேவையினை வழங்குவது இந்த நலன்புரிச் சங்கத்தின் நோக்கமாகும்.

### நலன்புரிச் சங்கத்தினால் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள்

| தொடரி லக்கம் | திகதி | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|---|
| 01 | 2017.01.02 | புதுவருடக் கொண்டாட்டம் மற்றும் திணைக்களத்தில் ஆக்கத்திறனுடன் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களைப் பாராட்டுவதற்காக விருதுகள் வழங்கும் வைபவம் சுஹுருபாய 19 வது மாடி கேட்போர்கூடத்தில் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. |
| 02 | | 2017 ஆம் ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடும் அங்கத்தவர்களுக்காக ரூபா 1100/- பெறுமதி வாய்ந்த சுடுநீர் போத்தலொன்று விகிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை 11 இலட்சம் ரூபாவாகும். |
| 03 | | அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பாவனைக்காக 2017 ஆம் ஆண்டுக்காக கொப்பிகள் வழங்கப்பட்டன. |
| 04 | 2017.02.28 | திணைக்கள பணியாட் தொகுதியினர் பாடிய பாடல்களை இலங்கை வானொலியின் புகழ்பெற்ற இசைநிகழ்ச்சியான "தாச" கூட்டு வியாபாரத்தின் "பிபிதென காயன பரபுர" நிகழ்ச்சியை சீன வானொலியில் புத்தாக்க நிகழ்ச்சியாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட முதல் நிகழ்ச்சியானது எமது திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. |
| 05 | 2017.05.10 | வெசாக் கொண்டாட்டத்துக்காக சுஹுருபாய கட்டடத்தை ஒளிமயமாக்குதல் மற்றும் அலங்கரிப்புப் பணிகளுக்குப் பங்களிப்புச் செய்தல். கவர்ச்சியான சுற்றும் வெளிச்சக்கூடுகள் முகாமைத்துவ உதவியாளர் திரு.சஞ்ஜய நிரோஷன் அவர்களின் ஆக்கப் பங்களிப்புடன் சுஹுருபாய முன்பக்கத்தில் நிருமாணிக்கப்பட்டன. |
| 06 | 2017.05.20 | வருடாந்த ஒன்றுகூடல் பணியாட் தொகுதி மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்புடன் பீ.சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இதன்போது வினோத விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டி, நீர் விளையாட்டு உட்பட பல்வேறுபட்ட பல போட்டிகள் நடத்தப்பட்டன. சுமார் 2500 பேர் கலந்துகொண்ட இந்த ஒன்றுகூடலில் நாட்டிலுள்ள புகழ்மிக்க பல பாடகர்கள் பாடகிகள் கலந்து கொண்ட இசை நிகழ்சியொன்றும் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பாடக பாடகிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நட்பு ரீதியான சேவை காரணமாக எந்தவித கட்டணமும் அறவிடாமை விசேட அம்சமாகும். |

| | | |
|---|---|---|
| 07 | 2017.07.21 | திணைக்களத்தின் பணியாட் தொகுதி மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்காக சலுகை அடிப்படையில் நவலோக்க மருத்துவமனையுடன் இணைந்து முழுமையான மருத்துவப் பரிசோதனைகள் 7வது மாடியில் நடத்தப்பட்டன. |
| 08 | 2017.06.28 | திணைக்களத்தின் பணியாட் தொகுதிக்கான பெட்மின்டன் போட்டி பீ.சரவணமுத்து உள்ளக விளையாட்டுத் திடலில் நடத்தப்பட்டது. |
| 09 | | எமது திணைக்களத்தனி சிற்றூண்டிச்சாலையில் தயாரிக்கின்ற உணவுகளை மிகவும் சுத்தமானதும் ஆரோக்கியமானதுமான முறையில் வழங்குவது எமது சங்கத்தின் பிரதான நோக்கமாகும். நஞ்சு மற்றும் விசம் இல்லாத உணவுகளை அங்கத்தவர்களுக்கு வழங்கும் நோக்கில் நஞ்சு, விசம் கலக்காது பயிர்செய்யப்படுகின்ற மரக்கறி வகைகள் டியுலிப் எக்ரோ கம்பனியுடன் இணைந்து சிற்றூண்டிச்சாலைக்கு பெற்றுக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக சந்தையில் காணப்படுகின்ற விலைகளுக்கும் அதிகமான விலையைப் பெற்றுக் கொடுக்க நேரிட்டாலும் இதன் பண்புசார் தன்மையை கவனத்தில் எடுத்துக் கொண்டு அங்கத்தவர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் இதனைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| 10 | | நாட்டில் ஏற்பட்ட கடும் மழையின் காரணத்தால் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்காக எமது சங்கத்தினால் சேகரித்த பொருளுதவிகள் காலி உடுகம பிரதேசத்தில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| 11 | | நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த எமது திணைக்கள அங்கத்தவர்களுக்கு பண உதவிகளும் செய்யப்பட்டன. இதற்காக 557,825.00 ரூபா செலவு செய்யப்பட்டது. |
| 12 | | நூலக வாசகர்களுக்காக 2017 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களை எமது நூலகத்துக்குப் பெற்றுக் கொள்ளுவதற்காக 622,593.11 ரூபா தொகை செலவு செய்யப்பட்டது. |
| 13 | 2017.11.14 | வருடாந்த தர்ம போதனையை எமது அழைப்பின் பேரில் சங்கைக்குரிய மாவரலே ஹத்திய தேரர் அவர்களினால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. |
| 14 | 2017.12.20 | 2017 ஆம் ஆண்டு நத்தார் விழாவுக்காக வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற "பிலிந்து ஹதட நத்தலக்" என்னும் நிகழ்சியொன்று நடத்தப்பட்டதுடன் அன்றைய தினம் வறுமையில் வாடுகின்ற 50 குடும்பங்களுக்கு பாடசாலை உபகரணங்கள், பாதணிகள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பன சுஹுரூபாய பியச வளாகத்திலிருந்து வழங்கப்பட்டது. இதன்போது நலின் பெரேரா தலைமையிலான மேரியன்ஸ் இசைக் குழுவின் பங்களிப்புடன் கரோல் கீதங்களும் பாடப்பட்டன. |
| 15 | 2017.12.29 | வருட இறுதியில் "சதுடு சாஜ்ஜய" என்னும் நிகழ்ச்சி அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்புடன் பத்தரமுல்ல அபே கம வளாகத்தில் நடைபெற்றது. |

**ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව**
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
Department of Immigration & Emigration

''සුහුරුපාය'', ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சுஹுருபாய" ஸ்ரீ சுபுதிபுர வீதி, பத்தரமுல்ல, இலங்கை
**"Suhurupaya", Sri Subhuthipura Road, Battaramulla, Sri Lanka**